T. 1119.

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

### பதினேழாந்தொகுதி.

பத்திராதிபர்— திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1918—1919.

# செந்தமிழின்
# பதினேழாந்தொகுதியுள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| அரதாபக்குறிப்பு:— | | பத்திராதிபர். | உ௦உ |
| அரசவாழ்த்து:— | | ஸ்ரீமத். வ. சா. வேங்கடராமையரவர்கள். | ருரு |
| அவையல்கிளவி:— | ,, | அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். | ஙசக |
| அழகர்பிள்ளைத்தமிழின் தலைப்பக்கம் முகவுரை முதலியன:— | | பத்திராதிபர், (செ. அனு.) | சு-க-சு |
| அறஞ்செயவிரும்பு:— | ,, | ச. பூபாலபிள்ளையவர்கள். | உஉரு |
| ஆரியரும்தமிழும்:— | ,, | சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். | ரு௦ச |
| இந்துதேசசரித்திர காலக்குறிப்புகள்:— | ,, | ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயரவர்கள் பி.ஏ., பி.எல். | க௦ரு, கஙக, உருக |
| இரங்கற் பாக்கள்:— | ,, | வே. முத்துஸாமி ஐயரவர்கள். | உசகூ |
| இலக்கணவரம்பு:— | ,, | அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் | ங௦கூ |
| இளைசை:— | ,, | S. சோமசுந்தரதேசிகரவர்கள். | ஙருஎ |
| எங்கிலாந்தர் வெற்றியும், இந்தியர் மேன்மையும்:— | ,, | கா. ஸ்ரீ. கோபாலாசாரியரவர்கள், (செ. அனு.) | சு |
| ஐங்குறுநூற்றுத் திணைவைப்பு:— | ,, | S. ரெங்கையங்காரவர்கள். | ச௦ரு |
| ஐயவினாத்தொடர்:— | ,, | வ. சா. வேங்கடராமையரவர்கள். | கஉகூ, ஙருகூ |
| ஐயவினாவிளக்கம்:— | | நா. சொக்கையன். | உசங |
| ஒரு தமிழ்ச்சங்க வருடக் கூட்டம்:— | ,, | டி. நாகலிங்கம் பிள்ளையவர்கள். | கஉஎ |

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| ஒருவருடக் கொண்டாட்டம்:— | ஒரு செந்தமிழ்நேயன். | ௬௩ |
| ஒரு வேண்டுகோள்:— | ஒரு கொங்கன். | ௨௬0 |
| ஷை | அ. கணபதி. | ௨௬௬ |
| ஓர் அறிக்கை:— | ஸ்ரீமத் ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயரவர்கள், பி.ஏ., பி.எல். | ௧௩௬ |
| ஓர் ஐயவினா:— | மாணவன். | ௧௨௫ |
| கடவுளுண்டு:— | ,, ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள். | ௧௧௩ |
| கடைச்சங்ககாலம்:— | ,, இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள். | ௧௮௫ |
| குச்சரக்குடிகை:— | ,, சே. ஜி. சேஷையரவர்கள். | ௪௮௬ |
| குணப்பத்து:— | ,, வேங்கடராமையரவர்கள். | ௫௧௭ |
| குறுந்தொகையுரை:— | ,, அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள். | ௨௫௭ |
| சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்: | ,, அ. வா. வேங்கடராமையரவர்கள். | ௧௩௭, ௧௭௭, ௩௨௧ |
| சிலப்பதிகாரத்திலிருந்து சிந்தனையில் வந்த செய்யுட்கள்: | ,, ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள். | ௩௬௪ |
| சிவஞானபோதம்:— | ,, ச. சபாரத்தின முதலியாரவர்கள். | ௨௩௭ |
| செந்தமிழ்நிலைத சிவசிந்தையேயாம்: | ,, ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள். | ௩௧௧ |
| தமிழுணர்ந்த தம்மர்களுக்கறிவுறுத்தல்:- | ஷை | ௩௧௮ |
| தமிழரும் போர்னியோதீவும்:— | ,, சோமசுந்தரதேசிகரவர்கள். | ௫0௬ |
| தமிழ்ச்சங்ககாலம்:— | ,, கே. ஜி. சங்கரையரவர்கள். | ௪௫௭ |

| | | | |
|---|---|---|---|
| தமிழ்மொழியை வளர்த்தல்:— | ஸ்ரீமத் | ஊ. சா. வேங்கடராமையரவர்கள். | ௪௪௧ |
| திருநங்கோய் மலைச் சாசனமும் அரதனகிரி மலைச்சாசனங்கள். | ,, | சோமசுந்தர தேசிகரவர்கள். | ௩௧௩ |
| திருவிடைவாய்த் தேவாரப்பதிகம்:— | ,, | ஷை | ௧௬௫ |
| துணைவிஞ்ஞாபனம்:— | ,, | ஊ. சா. வேங்கடராமையரவர்கள் | ௫௪ |
| தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்:— | ,, | கே. எஸ். நவநீதகிருஷ்ண பாரதிகள். | ௨௦௧ |
| தொல்காப்பியமும் மயிலைநாதருரையும் | ,, | நவநீதகிருஷ்ணபாரதிகள். | ௪௮௧ |
| நம்மாழ்வார்வண்ணம்:— | ,, | ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள். | ௮௧ |
| நல்லிசைநாற்பது:— | ,, | ச. பூபாலபிள்ளையவர்கள். | ௪௮௩ |
| நல்வரவு:— | ,, | த. வே. உமாமகேசுவரன் பிள்ளையவர்கள். | ௨௭௧ |
| நன்னூல்:— | ,, | க. வயித்தியலிங்கம்பிள்ளை யவர்கள். | ௪௩௩ |
| நன்னூற்சூத்திரவமைதி: | ,, | நவநீதகிருஷ்ணபாரதிகள். | ௫௧௩ |
| நாமகள்பதிகம்:— | ,, | வே. முத்துஸாமி ஐயரவர்கள், எம்.ஏ., எல்.டி. | ௧௦௩ |
| நோயில்லாவாழ்வு:— | ,, | ச. பூபால பிள்ளையவர்கள். | ௧௨௩ |
| பண்டைத்தமிழரசர்களதாட்சி:— | ,, | ஊ. சா. வேங்கடராமையரவர்கள். | ௬௭ |
| பதார்த்ததீபிகை:— | ,, | அ. குமாரசுவாமிப் பிள்ளை யவர்கள். | ௧௭௩, ௪௦௧, ௫௫௧ |
| பதின்மூன்றாம்புறப் பாட்டும் அதன் உரையும்:— | ,, | S. வையாபுரிப் பிள்ளையவர்கள், பி.ஏ., பி.எல். | ௩௬௧ |

| | | | |
|---|---|---|---|
| பதின்மூன்றாவதுபுறப் பாட்டும் உரையும்: | ஸ்ரீமத் | S. வையாபுரிப்பிள்ளையவர்கள். | உஎகூ |
| பதின்மூன்றாம் புறப் பாட்டுரை யாராய்ச்சி:— | | ஷை | ருஉக |
| பல்லவ சரித்திரம்:— | ,, | S. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள். | க |
| பியதச்சி:— | ,, | வேங்கடராம சர்மாவவர்கள். | சoச |
| பிரபந்த தீபிகை:— | ,, | பி. பாஸ்கரையரவர்கள். | கருகூ |
| பிழைதிருத்தம்:— | ,, | கா. ஸ்ரீ கோபாலாசாரியரவர்கள். | ககஉ |
| ஷை | | | ருகங |
| ஷை | ,, | கே. எஸ். நவநீதகிருஷ்ண பாரதிகள். | ருகசு |
| ஷை | ,, | S. சோமசுந்தரதேசிகரவர்கள். | ருகஅ |
| புத்தகக்குறிப்பு:— | | | கசங |
| புத்தகமதிப்புரை:— | | பத்திராதிபர். | உஉo, சசஅ, சஅo |
| புறப்பாட்டுத்தலைவரும், மத்தியகாலவரசரும்:— | ,, | S. சோமசுந்தரதேசிகரவர்கள். | கூருகூ |
| பெரியபுராணவாராய்ச்சி:— | | ஷை | கூசரு |
| பேராசிரியருரையும் அண்மைவிளியும்:- | | பத்திராதிபர். | சசங |
| பொருட்டொகை நிகண்டின் தலைப் பக்கமும், முகவுரையும்:— | ,, | ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள். | க-ரு |
| மஹாயுத்த சமாதான வாழ்த்து:— | | பத்திராதிபர். (செ-அனு.) | க |

| | | |
|---|---|---|
| மஹாயுத்த சமாதான வாழ்த்து:— | சு. நல்லசிவன் பிள்ளை. (செ-அநு.) | உ |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தனித் தமிழ்ப்பரீக்ஷை ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைகளின் தேர்ச்சி விவரம். | மாட்சிமைதங்கிய அக்கிராசனாதிபதியவர்கள். | |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாக சபைத் தீர்மானங்கள்:— | ஸ்ரீமத். ஜாயிண்டு செக்ரடெரி யவர்கள். | ருரு |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாக சபைத்தீர்மானம் வரவுசெலவு கணக்குமுதலியன:— | ஷை | |
| ஷை | ஷை | |
| ஷை | ஷை | |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவு கணக்கு. | ஷை | |
| ஷை | ஷை | |
| முப்பொருளாராய்ச்சி:- | ,, ச. பூபாலபிள்ளையவர்கள். | ருஎ |
| முன்னதன்மறுதலை முடிவு:— | பத்திராதிபர். | உகக, ஙகக, ருஉஅ |
| யவனர்:— | ,, வெ. வெங்கடராம சர்மா. | ருருக |
| யாப்பருங்கல நூலாசிரியர் பெயர்:— | ,, மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள். | சகங |
| ரெகுநாத சேதுபதியவர்கள்மீது வண்ணம்:— | ,, ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள். | அங |

வரவேற்பு வாழ்த்து:—ஸ்ரீமத் எம். கோபாலகிருஷ்ணையரவர்கள் உகசு

வரவேற்பு வாழ்த்துக் கவிகள்:— ,, வே. முத்துஸாமி ஐயரவர்கள். கஎரு

விண்டோர்ச்செழியன்:— ,, சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். கூச

வித்தியாபாஸ்கர செந்தமிழ்ச்சங்கத்தின் 3-ம் ஆண்டு நிறைவுச் சிறப்புச்செய்யுள்:— ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள். உஉகூ

விநோதரசமஞ்சரி:— ,, அ. குமாரஸ்வாமிப் பிள்ளையவர்கள். கஎஉ, உகக

வேளாளர்மரபு ஆராய்ச்சி:— ,, சுப்பிரமணியாசாரியாரவர்கள், பி.ஏ., எல்.டி. சகசு


---

## செந்தமிழ்ப் பதினேழாந்தொகுதியில் வெளிவந்த நூல் (முற்றுப்பெற்றது).

பொருட்டொகை நிகண்டு. — ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள், சு, எ, அ, கூ, க0, கக, கஉ பகுதிகள்.

---

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-௧௭.] காலயுக்தி௵ கார்த்திகை௴ [பகுதி ௧.
Vol. XVII. November-December, 1918. No. 1.

## பல்லவ சரித்திரம்.

### அத்தியாயம் IV.

### நந்திவர்மன்வமிச சரித்திரம்.

### முன்னுரை.

### I. கங்கபல்லவ வாதம்.

இந்தியாவில் 1881-இல் ஒருவர் இருந்தார். அவர் பல்லவ சரித்திர விஷயமாக மிக உழைத்திருப்பதால் அவரை நாம் மறக்கக்கூடாது. அவர் பெயர் J. டிலாபோன். அவர் புதுச்சேரியில் 'மாஜிஸ்டிரேற்று' உத்தியோகம் வஹித்தார். புதுச்சேரியின் பக்கத்திலுள்ள பாஹூரில் நிருபதுங்கன் சாஸனங்களையும் காசகுடியில் நந்திவர்மன் பல்லவமல்லன் சாஸனங்களையும் கண்டுபிடித்தார்.

இவையிரண்டும் அகஸ்மாத்தாய்க் கண்டுபிடிக்கப்பட்டனஅல்ல. அவை, இந்தி சரித்திரத்தையும் பாஷைகளையும் பல்லாண்டு வருந்திப் படித்த ஒரு பண்டிதரின் தன்னயங்கருதா உழைப்பினால் வந்தவையே.

1905-ல் கூடிய பௌரஸ்தர் மகாநாட்டுக்காக (Congress of Orientalists) பாரிஸ்நகரத்துக் கீழ்த்திசைப்பாஷை வித்யாலயத்தார் வெளியிட்ட ஒரு வியாசத்தில், வித்யாலயத்தில் ஒரு புரோபஸரா யிருந்த மிஸ்டர் வின்ஸன் பாஹூர்ச்சாஸனங்களின் ஸம்ஸ்கிருத— தமிழ் மூலங்களைப் பூரணமாகப் பிரசுரித்திருக்கிறார். என்றாலும் பிரஞ்சுபாஷையில் வெளிவந்திருக்கும் நூல்களை இந்தியவித்வான் கள் புறக்கணித்துவிடுகிறார்கள், ஆகையால் மிஸ்டர் ஹூல்ட்ஷ்

எழுதிய ஒரு ஸங்கிரஹத்திலிருந்தே (Vide his article No. 23 page 180 in Vol. IV Epigraphia Indica) பாஹூர்ச்சாஸனத்தைப்பற்றி ஏதாவது அறியப்படுகின்றது.

மூலபாடம் மொழிபெயர்ப்பின்றிச் சிலநாட்களுக்குமுன் திரும்பவும் பிரசுரிக்கப்பட்டது. (Part V Vol. II of S. I. I. X. 514).

இந்த மூலம் அபூர்ணமானது. அது மிஸ்டர் டிலாபோன் காலத்தில் புதுச்சேரியில்வசித்த ஒரு பண்டிதரின்வேலை. அநேக இடங்களில் தப்பாகப் பெயர்த்தெழுதப்பட்டிருக்கிறது.

ஆகையால் பாஹூர்ச்சாஸனங்களை மொழிபெயர்க்கவேண்டுமென்றெண்ணி மூலத்தின் ஸம்ஸ்கிருதபாகத்தை (Vol II of S. I. I.) உள்ளபடி மொழி பெயர்த்துக்கொடுக்கவேண்டுமென்று மகா-௱-௱-ஸ்ரீ T. A. கோபிநாத ராயரவர்களை வேண்டினேன். அவர்கள் அதைப் பின்வருமாறு மொழிபெயர்த்துக்கொடுத்தார்கள்.

பாஹூர்ச்சிலாலிகித மொழிபெயர்ப்பு. சுலோகம் (1) தேவர்களின் கிரீடங்களால் உரசப்பெற்ற பாதபத்மங்களையுடையவரும், ஸர்வலோகராலும் பயப்படப்பெற்ற ராக்ஷஸர்களின் நாசத்துக்குக் காரணமானவரும், நித்யமானவரும், தாமரையிதழ்கள்போன்ற கண்களையுடையவருமான மதுசூதனன் உனக்கு எல்லா வாழ்வையும் தரக்கடவர்.

(2) எல்லாச்சிருஷ்டிப்பொருள்களுக்கும் உற்பத்திஸ்தானமாகிய அவரது உந்திக்கமலத்திலிருந்து பிரம்மன் தோன்றினான்.

(3) உலகநாயகனான நான்முகப்பிரம்மனிடமிருந்து அங்கிரஸ் தோன்றினான். அவனிடமிருந்து அஸுரன் வலனை ஸம்ஹரித்த சகானது (இந்திரன்) மந்திரியான பிரஹஸ்பதி தோன்றினான்.

(4) அவனிடமிருந்து ஸம்புவும் அவனிடமிருந்து பரத்வாஸனும் தோன்றினார்கள். அவனிடமிருந்து போரில் இந்திரனைப்போல் சக்தியுடைய வில்லவன் துரோணன் தோன்றினான்.

(5) பிறகு துரோணனிடமிருந்து எல்லாப் படைக்கலப் பயிற்சியுமுடையவனும் பினாகியின் (சிவன்) அமிசாவதாரமானவனும் ஆகிய சக்தியுடைய அசுவத்தாமன் தோன்றினான்.

(6) அசுவத்தாமனிடமிருந்து பல்லவராஜன் தோன்றினன். அவன் நவகண்டங்களிலும் உழவர்முதல் அரசர் ஈருகவுள்ள ஸகலர் களையும் காப்பாற்றினன்.

(7) அவன் மரபில் விமலன், கோங்கணிகன், முதலிய அநேக ராஜாக்கள் தோன்றினர்கள். அவர்கள்முன்னே சத்துருக்களின் மனைவிமாரெல்லாம் தலைவணங்கினர்கள். எல்லா அரசர்களும் அவர் களது ஆணைக்கு அடங்கிநடந்தார்கள். அவர்கள் தமது குடிகளால் அன்புபாராட்டப்பட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் வெற்றி யுடையவர்களாகவே இருந்தார்கள்.

(8—9) விமலன் ஆதியான மன்னவர்கள் நாற்கடலாற் சூழப் பட்டஉலகத்தை ஆண்டு, தங்கள் சக்தியால் விமானங்கள் வழி சுவர்க்கத்தை அடைந்தபிறகு நந்திவர்மன் என்னும் அரசன் வாழ்ந் திருந்தான். அவன் இந்திரனைப்போன்ற சக்தியுடையவனும், முராரி யினது சிறந்தபக்தனும், மிகச்சக்தியுடையவனும் எல்லாமன்ன ராலும் முடிவணங்கப்பெற்றவனுமாயிருந்தான்.

(10) இவ்வரசன் இந்தக்கலியுகத்திலும் பூமியை நீதியாக ஆண்டு அநேக தானதருமங்கள் செய்ததனல் இந்திரனைப்போற் பிர காசித்தான்.

(11) இந்தச்சுலோகம் தப்பாக இருக்கிறது. அதில் கீழ்வரும் கருத்து அடங்கியிருப்பதாகத்தோன்றுகிறது. நந்திவர்மன் தன் சத்துருக்கள் தலைகளை அரிந்தான். அந்தத்தலைகள் யமபுரத்துக்குப் பிரயாணம் புறப்படவிருக்கும் அவர்கள் ஆத்மாக்களுக்குக்கொடுக் கப்பட்ட கவளச்சோற்றை ஒத்திருந்தன.

(12) தந்திவர்மனிடமிருந்து வலிமிகுந்த நந்திவர்மன் தோன் றினன். அவன் ஒருவருடைய உதவியுமின்றித் தனிமையாக உல கத்தையெல்லாம் போரில் வென்றான்.

(13) முராரிக்கு (விஷ்ணுவுக்கு) லக்ஷ்மி மனைவியாக இருந்தது போல் ராஷ்டிரகூடமரபில் தோன்றிய சங்கா என்னும் இராணி நந்தி வர்மன் மனைவியாக இருந்தாள்.

(14) அரசனது இராணியான சங்காதேவி பூமிதேவியைப் போல் பொறுமையும், குடிகளிடத்துத் தாய்க்கொப்பான அன்பும், உடையவளாய் லக்ஷ்மியின் அவதாரமாக விளங்கினாள்.

(15) உயர்குடிப்பிறப்புக்காக மதிக்கப்பட்டவனும் மூன்று உலகங்களுக்கும் நாயகனானவனும், உதயசூரியனைப்போல் பிரகாசமுடையவனும் கலாப யுத்தத்தில் ஜெயம்பெற்றவனும் ஆன நிருபதுங்கதேவன் அறிவு, அழகு, கல்வி முதலியவைகளையுடைய அந்த இராணியிடம் தோன்றினான்.

(16) முன்னர்ப் பாண்டியரிடம் தோல்வியடைந்த பல்லவச் சேனை இம்மன்னனது அருளினால் அநேக சத்துருக்களையும், அவர்கள் நாடுகளின் வளங்களையும் அரிசித் நதிக்கரையில்வைத்து எரிக்க வல்லதாயிற்று.

(17) இந்தப்பெயர்பெற்ற நிருபதுங்க மகாராஜன் வயதில் இளையோனாயிருந்தாலும் இராமனைப்போல, இந்த உலகத்தில்மட்டுமன்றி மற்ற உலகங்களிலும் பெயர்பெற்றான்.

(18) தன் குடிகளைக்காப்பாற்றுவதில் கருத்துடையோனாகிய குருவமிசத்தில்தோன்றிய வேசாலிமார்த்தாண்டன் (சூரியன்) இந்த நிருபதுங்கராஜனுக்குக் கடமைப்பட்டிருந்தான்.

(19—20) அவன் உலகத்தில் சந்திரனைப்போல மஹத்வம் பொருந்தியவனாக இருந்தான். பெருந்தன்மை முதலானவைகளில் அவன் கடலை ஒத்திருந்தான். சூரியனைப்போல் அவன் உலகத்தையெல்லாம் காப்பாற்றியதனால் அவன் உலகத்தவருக்கு ரக்ஷகனாயிருந்தான். ஆகையால் அவன் பெயருக்கும் உடலுக்கும் ஒற்றுமையிருப்பது சரிதான்; அல்லது அவன் தோற்றத்தினாலேயே ஒருஅரசன்தான்.

(21—23) குருவமிசத்தின் செல்வத்தைப் பெருகச்செய்த அவன் நிருபதுங்கனிடம் விண்ணப்பம்செய்து அவனது ஆஜ்ஞாபதி மூலம் அநுமதிபெற்று வித்யாஸ்தானத்துக்கு வேசாலிப்பாடிமாகாணத்திலுள்ளசேடுபாக்கம், விளாங்காதிரேபாந்தம் (விளாங்காத்தூர்) இறைப்புணேச்சேரி, ஆகிய மூன்று கிராமங்களையும் தானஞ்செய்தான்.

(24—29) அனேகம் அலைகளையுடைய கங்கையை தூர்ஜடி (சிவன்) ஜடையில் தாங்கிக்கொண்டிருப்பதுபோல் பதினான்குகுணங்களையுடைய கல்விநதி பாஹூர்க்கிராமவாசிகளின் இருப்பிடத்தைச் சுற்றிப்பாய்ந்துகொண்டிருந்தது; ஏனென்றால் அது பண்டிதர்கள் வாசஸ்தானம். அதனால் அதற்கு வித்யாஸ்தானம் என்றுபெயர்.

இந்த அரசன் ஆஜ்ஞாபதிமூலம் பாஹூர் வாசிகளான வித்வான்களுக்கு ஒரு யானையின் பிரதக்ஷிணப்பிரமாணம் கிராமங்களை அரசிறையின்றித் தானம்செய்ததனால் மிகப்பெருமையடைந்தான்.

தன் அரசன்ஆணைக்கு அடங்கிடப்பவனும், தருமசிந்தனையுடையவனும், மூவுலகமன்னர்களாலும் (அரசனாலும்?) மதிக்கப்பெற்றவனும், இந்திரனது குருவாகிய பிரஹஸ்பதியைப்போல் கீர்த்திபெற்றவனும் ஆன ஸ்ரீதுங்கவர்மனது மந்திரி தான் செய்த இந்தத்தருமத்தைப் பிற்காலத்துஅரசர்களும் பாதுகாத்துவரும்படி மிகவும் வேண்டிக்கொள்கிறான்.

(30) பாஹூர்வாசிகளின் வித்யாஸ்தானத்தின் அடிமையும் சாஸ்திரஜ்ஞனுமான தாசயன் இந்தஸ்துதிபொருந்திய பிரமாணத்தை எழுதினான். (தமிழ்ப்பாகம் மொழிபெயர்க்கப்படாது விடப்பட்டது).

(31) தருமம் செய்பவனுக்கும் அதைக்காப்பவனுக்கும் ஸமபலன் கிடைப்பதனால் நீங்களும் அதைக்காப்பாற்றுங்கள் என்றுகூறி, முகுந்தன்பாதங்களைத்தாங்கும் தன்சிரஸினால் தாழ்மையாகவணங்கி நிருபதுங்கன் பிற்காலத்தில்வரும் அரசர்களிடத்தும் பிரார்த்திக்கின்றான்.

(32) உதிதோதித வமிசத்துக்கு அணியானவனும் எல்லாச் சாஸ்திரங்களிலும் வல்லவனும் பல்லவர்களின் பரம்பரைத்தாஸனுமாகிய பொற்கொல்லன் நிருபதுங்கன் இந்தப்பிரமாணத்தை எழுதினான்.

தென்னிந்திய சிலாலிகிதஆராய்ச்சி பிறப்பதற்குமுன் பாஹூர்ச் சாஸனங்கள் கிடைத்தன. தந்தி நந்தி நிருபதுங்கன் வமிசம் மிகப் புதிதாயிருந்தது. சில சிலாலிகிதங்களைப் பெயர்த்தெழுதியிருப்பதுடன் மிஸ்டர் ஹூல்ட்ஷ் புதுப்பிரமாணங்களை, பாஹூர்ச்சாஸனங்களோடு பொருத்தமுயன்றார்.

நூர்ப்பாக்கியவசமாய் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சாஸனங்களில் கீழ்முத்துகூர்ச்சிலாலிகிதம் உட்பட்டிருந்தது. அதை மிஸ்டர் ஹூல்ட்ஷ் பின்வரும் குறிப்போடு வெளியிட்டார். (Ep. Ind. Vol IV P. 177).

இந்தச் சிலாலிகிதம் வெற்றிபொருந்திய நரஸிம்ஹவர்மனது அரசாட்சியின் 18-வது வருஷத்தில் உண்டானது. இதேபெயரைக் காஞ்சிபல்லவஅரசர்களுள்ளும் காணலாம். ஆனால் சிலாலிகிதங்களின் அடியிலுள்ள இரண்டு உருவங்களால் எருதுமுடியும் தடிக்கொடியுமுடைய பல்லவ வமிசத்தவரால் இந்தச்சாஸனம் செய்யப்பட்டதென்று நம்பமுடியாமலிருக்கிறது. ஏனென்றால் மிஸ்டர் கிகெல் பதிப்பித்த மேலைக்கங்க வமிசத்தின் 3-சிலாலிகிதங்களில் களிறு தோன்றுகிறது. ஐதீக கங்கவரசன் கொங்கணியின் கொடியில் எழுதப்பட்டிருப்பது "ஹம்ஸம்" எனப்படுகிறது.

ஆம்பூரில் கண்டெடுக்கப்பட்ட நிருபதுங்கனது இரண்டு சிலாலிகிதங்களையும் வெளியிட்டபொழுது மிஸ்டர் ஹூல்ட்ஷ் சொன்னதாவது (Ep. Ind. Vol IV P. 180).

"அன்றியும் நிருபதுங்கவர்மனது ஆதிப்பூர்விகர்களில் கொங்கணிகன் பெயரை பாஹூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன. இது மேலைக்கங்க வமிசத்தவரின் ஆதிபிதாவாகக்கருதப்படும் கோங்கணியின் ஞாபகார்த்தமாக உள்ள பெயரென்று நான் எண்ணுகிறேன்."

பின்னும் (Ep. Ind. Vol III P. 182)

நரஸிம்ஹவர்மனது கீழ்முத்துகூர்ச் சிலாலிகிதத்தில் மேலைக்கங்கவரசர்களின் சின்னங்கள் இருக்கின்றன; அதன் எழுத்துக்கள் நிருபதுங்கனது இரண்டு ஆம்பூர்ச்சாஸன எழுத்துக்களைவிட மிகப்பழமையானதாக இருக்கின்றன. நிருபதுங்கன் பல்லவனது மட்டுமன்றி மேலைக்கங்க அரசரின் குலமுதலோன் கொங்கணிக்கும் பின் வந்தோன் என்று பாஹூர்ச் சாஸனங்கள் கூறுவதை நாம் ஞாபகத்தில் வைத்தால், மேலைச்சளுக்க அரசனாகிய இரண்டாவது விக்ரமாதித்தனது எதிரியான நந்திவர்மனோடு காஞ்சிபல்லவர்களின் பழைய வமிசம் முடிவுக்கு வந்ததென்று எண்ண இடமாகின்றது. பிறப்பினால் மேலைக்கங்க வமிசத்தைச்சேர்ந்தவனும் பெயரால் பல்லவனும்

ஆகிய நரஸிம்ஹவர்மன் உரிமையால் அவர்களுக்குப்பின் தோன்றி னன். அவனுக்குப்பின்தோன்றிய தந்திவர்மன் நந்திவர்மன் என் னும் இரண்டு அரசர்களும் ராஷ்டிரகூட அரசர்களாகிய மூன்றுவது கோவிந்தனுக்கும் முதலாவது அமோஹவர்ஷனுக்கும் ஸமகாலத்தவ ராயிருந்தனர். வடஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முத லிய ஜில்லாக்களை ஆண்ட நந்திவர்மன்மகனை நிருபதுங்கவர்மன் அல்லது நிருபதுங்கவிக்ரமவர்மன் மேலைக்கங்க அரசர்களின் கொடிச் சின்னங்களைநீக்கிப் பல்லவர்களின் கொடிச்சின்னங்களைச் சுவீகரித் தான்.

மிஸ்டர் ஹுல்ட்ஷ் மனோகற்பிதம்செய்த கங்க—பல்லவவாதம் மிக இலேசானது. அதைச் சொற்பவார்த்தைகளால் சுருக்கிச் சொல்லிவிடலாம்.

நிருபதுங்கவர்மன் நந்திவர்மபல்லவனது வமிசத்தவனல்ல; அவன் பல்லவனுமல்ல; அந்தப்பட்டத்தை அவன் அநியாயமாய்ச் சுவீகரித்தான். பாஹூர்ச்சாஸன வமிசாவளியில் காணப்படும் கொங்கணிகன் என்னும் பெயரால் அவன் நந்திவர்ம பல்லவமல்லனு டைய வமிசத்தவனல்லவென்றும் மேலைக்கங்கரிடமிருந்து உற்பவித்த சில சிற்றரசர்களின் தோன்றல் என்றும் தெளிவாகின்றது.

கங்க—பல்லவவாதம் முழுதும் கொங்கணிகன் என்ற பெய ரொன்றைமட்டும் ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. ஒரு புது வமி சத்தை ஸ்தாபிக்க இந்தப்பெயர் ஒன்றுமட்டும் போதுமா?

துர்ப்பலமான ஆதாரத்தை வைத்துக்கொண்டு மிஸ்டர் ஹுல்ட்ஷ் ஒரு வழியைக்கற்பிதம் செய்துவிட்டார். பிற ஆதாரங் களால் பலப்படுத்தப்பட்டாலன்றி இதை ஒப்புக்கொள்ளமுடியாது. அதுவரையிலும் இது வெறும் ஊஹம் மாத்திரமாகவே இருக்க வேண்டும். நிருபதுங்கனும் அவனது பூர்வீகர்களும் கங்கவமிசத் தவர்கள் என்று சந்தேகமறத்தெரியும் காலம்வரை, தந்திவர்மன் (Ins No 80 of 1898) நந்திவர்மன் (Ins No 72 of 1898), நிரு பதுங்கன் (No 89 of 1898) முதலியோர் காலத்திலுள்ள சிலாலிகிதங் கள் எல்லாம் பல்லவர் சிலாலிகிதங்களாகவே கருதப்படவேண்டும்.

மிஸ்டர் ஹூல்ட்ஷ் அவ்வாறு கருதவில்லை. அவர் எழுதிய 1897-ஆவது வருஷத்திய எபிக்ராபி ரிப்போர்ட்டில் (G. O. Nos. 1093—1096, 29th August 1898) விஜயநந்தி விக்ரமவர்மனது அரசாட்சியின் 17-வருஷத்திய சிலாலிகிதத்தை (Ins No 304 of 1897) 'கங்கபல்லவ' என்ற தலைப்பின்கீழ் வைத்திருக்கிறார். ஆகையால் இந்தத் தப்பானகொள்கையை உறுதிப்படுத்தப் போதுமான ஆதாரங்கள் இல்லாதிருந்தும் அது துறைத்தனத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கங்க—பல்லவ வமிசம் பல்லவ, சோழ, பாண்டியவம்சங்களோடு ஸமநிலையில் எண்ணப்பட்டிருக்கிறது.

இது ஒன்றினாலேயே மிஸ்டர் ஹூல்ட்ஷின் கொள்கை ஆட்சேபணைக்குப்பாத்திரமாக இருக்கின்றது.

நிருபதுங்கன் கங்கவமிசத்தவன் என்று கற்பிக்கவும், நாம் மேலே உத்தரித்த வாக்கியங்களை எபிக்ராபியா இண்டிகாவில் எழுதவும் அவருக்கு ஸர்வ சுதந்திரங்களும் உண்டு.

ஆனால் கங்க—பல்லவவமிசஉண்மை ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது போல் 1897 முதல் 1904 வரை 6-வருஷங்களுக்கு இடையிலுள்ள அநேக சிலாலிகிதங்களை கங்க—பல்லவப்பட்டிகையில் சேர்க்க அவருக்கு உரிமையே இல்லை. முதலில்,

(1) நிருபதுங்கன் கொங்கணிகன் என்ற ஒரு அரசன் வமிசத்தில் பிறந்தவனென்றும்,

(2) அந்தக் கொங்கணிகன் கங்கவரசனாகிய கொங்கணியேயென்றும்,

(3) நிருபதுங்கன் நந்திவர்ம பல்லவமல்லனது பின்வந்தோன் அல்லவென்றும் ருசுப்படுத்தவேண்டும்.

அத்தகைய ருசுக்கள் அவசியமானவையல்லவென்று மிஸ்டர் ஹூல்ட்ஷ் எண்ணினர்போலும்.

பெயர்களின் ஸாமியங்களைக்கொண்டும், தப்பான நம்பிக்கையினாலும், மனோகற்பிதமான வமிசாவளியை ஆதாரமாகக்கொண்டு பெயர்களைத்தப்பாக எண்ணியும், நிருபதுங்கன் கங்க வமிசத்தவன் என்று அவர் உறுதியாக நிரூபித்துவிட்டதாகக்கருதுகிறார்.

அதுமுதல் கங்க—பல்லவ வாதத்தை ருசுப்படுத்தவேண்டு மென்ற தேவையே இல்லாதுபோயிற்று. அவாது கொள்கையை வேறு ஆதாரங்களால் உறுதிப்படுத்தவேண்டிய தேவையும் இல்லாத தாயிற்று. கற்பிதத்தினுலேயே அது உண்மையாயிற்று.

ஆகையால் கங்க—பல்லவவாதம் தக்க ஆதாரத்தோடு பிறக்க வில்லை யென்ற விஷயத்தை நாம் பிரத்தியேகம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இதுகாறும் நாம் ஹுல்ட்ஷ் கொள்கையைப்பரிசோதனை செய் தோம். இனி வெங்கய்யா அவர்கள் வாதத்தைப்பரிசோதனை செய் வோம்.

திருவல்லிக்கேணியில் கண்டெடுக்கப்பட்ட தந்திவர்மன்சாஸ னத்தைப் பதிப்பித்தபொழுது வெங்கய்யா அவர்கள் எழுதியதாவது (Ep. Ind. Vol VIII No. 29 P. 291) பல்லவ வமிசத்தின் அணி யாய் விளங்கியவனும் பாரத்வாஜ கோத்திரத்தைச்சேர்ந்தவனுமான தந்திவர்மமஹாராஜன்காலத்தில் இந்தச்சாஸனம் தோன்றியிருக் கிறது. ஆகவே அவன் பல்லவவமிசத்தைச்சேர்ந்தவன் என்பதற்கு யாதொரு ஸந்தேகமும் இல்லை.

1905—1906-ஆவது வருஷத்திய எபிகிராபி ரிப்போர்ட்டில் (G. O. 492 2nd July 1906) 1905-இல் உள்ள 541-ஆவது சாஸ னம், பாரத்வாஜகோத்திரத்திலிருந்துதோன்றிய பல்லவதிலகவமி சத்தைச்சேர்ந்த தந்திவர்மன் ஆளுகையில் உண்டானதாக அவர் சொல்லுகிறார். பல்லவதிலக வமிசத்தைச்சேர்ந்த நந்திபோத்தரை யனது இராணி கங்க—பல்லவ அரசனுகிய நிருபதுங்கனுடையவும் ராஜகேசரிவர்மன் என்ற சோழராஜனுடையவும் காலம்வரை வாழ்ந் திருந்ததாக வேறுசாஸனங்கள்மூலம் நாம் அறிந்திருக்கிறோம். (Annual Report for 1900—01-Para 10). ஆகையால் மேலைச் சளுக்கராஜனை இரண்டாவதுவிக்ரமாதித்தனுல் தோற்கடிக்கப் பட்ட நந்திவர்மபல்லவமல்லன் காலம்வரை காஞ்சிபுரத்திலுள்ள ஆதிபல்லவர்கள் வாழ்ந்திருந்ததாகத்தோன்றுகிறது. நந்திவர்மபல் லவமல்லன் தோற்றதுமுதல் தென்னிந்தியாவில் அவர்களுடைய பிரக் யாதி நின்றிருக்கவேண்டும். பல்லவர்களுக்கும் பிற்காலத்தில் அவர்

கள் ஸ்தானத்தையடைந்த கங்கபல்லவர்களுக்குமுள்ள ராஜாங்கஸம் பந்தத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.''

ஆகவே "ஒரு சாஸனத்தில் ஒரு அரசன் பல்லவவமிசத்தைச் சேர்ந்தவனென்று சொல்லியிருந்தால் அவன் பல்லவ வமிசத்தைச் சேர்ந்தவன் என்பதற்கு ஸந்தேகமில்லை" என்ற ஒரு விதியைமிஸ்டர் வெங்கய்யா ஸ்தாபிக்கிறார்.

இந்த விதிப்படி திருவல்லிக்கேணி, திருவெள்ளறைத் தந்தி வர்மனும் பல்லவதிலகவம்சத்தவனான நந்திபோத்தரையனும் மெய் யாகவே பல்லவர்கள் என்றும் ஆகையால் நந்திவர்மபல்லவமல்லனது மரணத்துக்குப்பின்னும் பல்லவவமிசம் இருந்துவந்ததென்றும் வெங் கய்யா உறுதிப்படுத்துகின்றார். அவரது தருக்கமுறையை அநு ஸரித்தால் அவருடைய முடிபை இன்னும் கொஞ்சதூரங்கூடக் கொண்டுபோகலாம். தந்தியும் அவன்மகன் நந்தியும் பேரன் நிரு பதுங்கனும் பல்லவர்கள் என்றும் பாரத்வாஜ கோத்திரத்தவர்கள் என்றும் பாஹுர்ச்சாஸனங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக் கிறது.

மிஸ்டர் வெங்கய்யா ஸ்தாபித்தவிதியை இங்கே பொருத்திப் பார்த்தால் நிருபதுங்கனும் பல்லவவமிசத்தவனே என்று அவருக்கு ஸந்தேகமறச் சொல்லமுடியும். ஆனால் அப்படி ஸம்மதிக்க மிஸ்டர் வெங்கய்யாவுக்கு முடியாது. பாஹுர்ச்சாஸனங்களிலுள்ள வமிசா வளியில் காணப்படும் கொங்கணிகன் என்றபெயரே நிருபதுங்கன் கங்கவமிசத்தைச்சேர்ந்தவன்என்பதற்குப் போதுமான ஸாக்ஷியம் என்று மிஸ்டர் ஹுல்ட்ஷ் எண்ணுகிறார். ஆகையால் அதைப்பற்றி ஸந்தேகம் கொள்ளமுடியாது. நந்திவர்மபல்லவமல்லனுக்குப்பின் வந்தோர் நிருபதுங்கனது பூர்விகர்கள் என்று சொல்லமுடியாது. ஆகையால் ஏககாலத்தில் இரண்டு வமிசத்தார் ஆண்டிருக்கவேண் டும்.

பின்னர், கீழ்வரும் விதிகளை ஆதாரமாகக்கொண்டு மிஸ்டர் வெங்கய்யா ஒரு புது வாதத்தைக்கண்டுபிடித்திருக்கிறார்.

(1) நந்திவர்மபல்லவமல்லனுக்கப்பால் பல்லவவமிசம் நிலை பெற்றிருந்தது. திருவல்லிக்கேணித்தந்திவர்மனும் நந்திபோத்தரை

யனும் அவனுடைய பிரதிநிதிகள். போத்தரையன் போத்தவர்மன் என்ற பட்டப்பெயர்களினால் அவர்கள் கங்கபல்லவர்களிலிருந்து வித்யஸ்தாயிருக்கிறார்கள். (ஸம்ஸ்கிருதத்தில் போதமும் தமிழில்போத்தும் ஒருசெடியின்முளை யென்று பொருள்படுகின்றன. ஆகையால் முளை என்னும் பொருளுடைய பல்லவ என்ற பதமும் அவைகளும் ஒன்றே. (S. I. I. Vol. II P. 341) திருவல்லிக்கேணிச் சாஸனத்தில் உள்ள தந்திவர்மனது பல்லவதிலகன் என்ற பட்டப்பெயரிலிருந்து அவனது பின்வந்தோருக்குப் பல்லவதிலகன் என்று மாபுப்பெயர் உண்டாயிருக்கலாம்; புரோகதியிலிருக்கிற கங்கபல்லவர்களிலிருந்து அவர்களைப்பிரித்தறிவதற்காக அந்தப்பெயர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம். (G. O. No. 492 2nd July 1906.)

(2) அதேகாலத்தில் கீழ்முத்துகூர் நரஸிம்ஹவர்மன் பாஹூர்த் தந்தி, நந்தி, நிருபதுங்கன், முதலிய கங்க உற்பவத்தலைவர்களுடைய வமிசமும் நிலைபெற்றிருந்தது. இந்தத்தலைவர்கள் நாளடைவில் மெய்யான பல்லவர்களின் ஸ்தானத்தை அடைந்தார்கள். விஜய என்னும் முன்னடைமொழியாலாவது, விக்ரமவர்மன் என்னும் பின்னடைமொழியாலாவது அவர்கள் பிரித்தறியப்படுகிறார்கள்.

மிஸ்டர் வெங்கய்யா இந்தவாதத்தை வெளிப்படுத்தியபொழுது அதைப்பலமாய் மறுத்தவர் ஒருவரே.

1907—ஏப்ரில் மாதத்தில் சென்னைக்கிறிஸ்தவ கலாசாலைப்பத்திரிகையில் T. A. கோபிநாதராயரவர்கள் எழுதிய "பல்லவர்களும் கங்கபல்லவர்களும்" என்ற வியாசத்தில் கீழ்வரும்விஷயங்களை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

(1) பிற்காலத்திய சிலாலிகித பரிசோதகர்களால் உண்மையெனக்கொள்ளப்பட்ட நிருபதுங்கனது கங்கவமிச உற்பத்தி தப்பானது.

(2) பல்லவவமிசம் ஒன்றுமட்டுமே இருந்தது. நந்திவர்மபல்லவனுக்குப் பின்வந்தோரும் நிருபதுங்கனது பூர்விகர்களும் ஒருவரே.

(3) நிருபதுங்கன் பாட்டனான தந்திவர்மன் பல்லவமல்லனது மகன்.

இறுதியில் கூறப்பட்டவிஷயம் மிகவும் முக்கியமானது. பல்லவ மல்லன் தந்திவர்மனது தந்தையென்று முதன்முதல் உறுதிப்படுத்தியது கோபிநாதராயரவர்களே. ஆகவே பல்லவர்களின் வமிசாவளி பின் வருமாறாகும்.

நந்திவர்மன் பல்லவமல்லன்
|
தந்திவர்மன்
|
நந்திவர்மன்
|
நிருபதுங்கன்.

ஆனாலும் கோபிநாதராயரவர்கள் சொன்னதை ஒருவரும் கவனிக்கவில்லை. மிஸ்டர் வெங்கய்யா தன் அபிப்பிராயத்தையே உறுதியாக நம்பிக்கொண்டிருந்தார். பொது ஜனங்கள் துரைத்தனத்தாரை ஆதாரமாகக்கொண்டு கங்க—பல்லவவாதத்தையே நம்பியிருந்தனர்.

இது 1907-இல் நிகழ்ந்த விஷயம். அதற்கப்பாலுள்ள பத்து வருஷங்களிலும் வெளிவந்த விஷயங்களால் கோபிநாதராயரவர்கள் கொள்கையே உறுதியடைகின்றது.

(1) நம்மிடம் அநேக பிரமாணங்கள் இருந்தாலும், நிருபதுங்கன் கீழ்முத்துகூர் நரஸிம்ஹவர்மனுக்கும் கங்கவரசர்களுக்கும் ஸம்பந்தப்பட்டவன் என்று விளக்க ஒரு பிரமாணமும் இல்லை.

(2) கங்க—பல்லவர்கள் நந்திவர்மன் பல்லவமல்லனது பின் வந்தோரை விரட்டி அவர்கள் ஸ்தானத்தைப்பெற்றார்கள் என்று நம்புவதற்கு ஆதாரமான உட்குழப்பங்களை விளக்கும் சாஸனம் ஒன்றாவது இதுவரையிலும் அகப்படவில்லை. பல்லவராஜ்யத்தில் ஜன எழுச்சியாவது, சண்டைகளாவது உண்டாகவே இல்லை.

(3) பல்லவர்களுடையவும் கங்க-பல்லவர்களுடையவும் சாஸனங்கள் தேசமுழுதும் பரவிக்கிடப்பதாகக்காணப்படுகிறது. ஆகையால் இவ்விருவமிசத்தாரும் ஏககாலத்தில் ஒரேராஜ்யத்தை ஆண்டார்கள் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். "ஏககாலத்தவரான இவ்விருவமிசத்தவர்களும் எந்த இடத்தில் ஆண்டனர் என்று குறிப்பிட முடியாது" (பல்லவர்களும் கங்கபல்லவர்களும் பக்கம்-8)

(4) நிருபதுங்கன் பல்லவவமிசத்தவன் என்று விளக்கும் பெயரை அவன் உடைத்தாயிருந்தான் என்று ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது. 1908-ஆவது வருஷத்திய 68-ஆவது நம்பர் வழுவூர்ச் சாஸனத்திலுள்ள நிருபதுங்க போத்தரையார் என்ற பெயரிலுள்ள போத்தரையார் என்ற பின்னடைமொழியினால், இயல்பான கோவிசயன் முன்னடையின்றி, அவன் பெயரைக் கங்க—பல்லவர் தொகுதியில் உட்படுத்தலாமோ என்பது சந்தேகவிஷயமாயிருக்கிறது. (G. O. No. 538 28th July 1909.)

நந்திவர்மன் பல்லவமல்லன் பின்வந்தோர் பெயருக்கு "கோவிசயன்" என்னும் முன்னடைமொழியும் விக்ரமவர்மன் என்னும் பின்னடைமொழியும் உண்டாயிருந்தன என்று வேலூர்ப்பாளயம் சாஸனங்களால் தெரியவருகின்றது. (G. O. No. 832 28th July 1911.)

அந்த வேலூர்ப்பாளயம் சாஸனங்களினாலேயே கீழ்வரும் வமிசாவளி சந்தேகமற ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது.

நந்திவர்மன் பல்லவமல்லன்
|
தந்திவர்மன்
|
கோவிசய நந்திவிக்ரமன்.

1907-ஆவது வருஷத்திலேயே—அதாவது இந்தச்சாஸனங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு 4-வருஷங்களுக்குமுன்—தந்திவர்மன் நந்திவர்மபல்லவனுக்கு மகனென்று கோபிநாதராயரவர்கள் உறுதி கூறிவிட்டதனால், கங்க--பல்லவவாதத்தின் வெறுமையும், கோபிநாதராயரவர்கள் வாதத்தின் வன்மையும் நன்குவிளங்கும். ஆனாலும் கோபிநாதராயரவர்கள் வாதத்துக்கு அநுகூலமான ருசுவொன்றும் காணப்படாததனால் இதுகாறும் அவர்களதுவாதம் ஸந்தேகாஸ்பதமாகவே இருந்துவந்தது. கங்க—பல்லவவாதத்துக்கு ஆதாரந்தான் என்ன? ஆதாரமெல்லாம் பாஹுர்ச்சாஸன வமிசாவளியிலுள்ள கொங்கணிகன் என்ற பெயரே.

நிருபதுங்கன் பல்லவன் அல்லவென்றும், அவன் கொங்கணிகனுக்குப்பின்வந்தோனாதலால் கங்கவமிசத்தவனென்றும் மிஸ்டர்

ஹால்ட்ஷ் கூறினர். வெங்கய்யா அவர்களும் அதை ஒப்புக்கொண்டார்கள். அதற்குக்காரணம் மேலேகூறிய ஒரு விஷயமே. அந்தக் காரணம் துர்ப்பலமானதென்று கோபிநாதராயரவர்களும் சொன்னர்கள்; கங்க-பல்லவவாதத்தைத் தகர்ப்பதற்கு அவர்கள் ருசுக்களும் தேடினர்கள். என்றாலும் நிருபதுங்கன் பல்லவன் அல்லவென்றும் கொங்கணிகளுக்குப் பின்வந்தோனென்றும், அவ்விதியை ஸ்தாபித்தோர் மறுத்துக்கொண்டே இருந்தார்கள். சிலநாளைக்குமுன் வெளிவந்த (Madras 1917) வேலூர்ப்பாளயம் சாஸனங்களை (Part V of Vol II of S. I. I.) வெளியிட்டபொழுது 'கோபிநாதராயரவர்களின்வாதம், பாஹூர்ச்சாஸனப்பெயர்களை வேலூர்ப்பாளயம் சாஸனப்பெயர்களோடு பொருந்துகின்றதென்றும், முன்னையசாஸனத்திலுள்ள விஜயநிருபதுங்கவர்மன் அநேகமாய், பின்னையதிலுள்ள மூன்றுவது நந்திவர்மனது மகனாயிருக்கலாமெனக்காட்டுகின்றதென்றும்" H. கிருஷ்ணசாஸ்திரியவர்க்ள் கூறினர்கள். (S. I. I. Vol II Part V No. 98. P. 505).

பின்னர், இதற்கு மாறாகநிற்கும் ஆக்ஷேபமெல்லாம் வம்சாவளி ஒன்றேயென்றும், முன்னையதில் கொங்கணிகன் என்ற தெளிவான மேலைக்கங்கப்பெயர் காணப்படுகிறதென்றும், பின்னையதில் அது காணப்படவில்லையென்றும் H. கிருஷ்ணசாஸ்திரியவர்கள் தெளிவாகக் கூறினர்கள்.

1917 ஜூன் மாதத்தில் வாயலூர்ச்சாஸனம் வெளிவந்தபொழுது இந்தத்தடையும் நீங்கியது.

ராஜஸிம்ஹன் என்ற இரண்டாவது நரஸிம்ஹவர்மனுடைய பூர்விகர்களது பூரணமான வம்சாவளி வாயலூர்ச்சாஸனங்களில் பெறப்பட்டதென்று இந்தப்புத்தகத்தில் இரண்டாவது அத்யாயத்தில் கூறியுள்ளோம்.

பல்லவன், அசோகன், ஹரிகுப்தன், ஆரியவர்மன் ஆதிய பெயர்களுக்கப்பால் காளிந்தன், பியாமல்லன், ஏகமல்லன், விமலன், கொங்கணிகன், காளபர்த்திரி, சூதபல்லவன், வீரகூர்ச்சன் முதலிய பெயர்கள் வருகின்றன.

ஏழாவது நூற்றூண்டில், ஒருகல்லில் செதுக்கப்பட்ட பல்லவ வமிசாவளிப்பட்டிகையில் ஆரியவர்மன், கொங்கணிகன் ஆதியான மேலைக்கங்கவமிசத்துப் பெயர்கள் இருப்பதனுலே, ஆறுவது நூற்றுண்டில் பல்லவர்களுக்கும் மேலைக்கங்க அரசர்களுக்கும் உண்டாயிருந்த நட்பும் ராஜாங்க ஸம்பந்தமும் வெளியாகின்றனவென்று நாம் கூறியுள்ளோம். நமது கூற்றை பெனுகொண்ட சாஸனங்கள் (G. O. No. 920 4th August 1914. Part II No. 4. Page 86) உறுதிப்படுத்துகின்றன; கொங்கணிவர்மன் பேரனுன ஆரியவர்மனை, பல்லவ அரசனுன ஸிம்ஹவர்மன் முடிசூட்டிவைத்தானென்றும், அவனுடைய மகன் பெயர் ஸிம்ஹவர்மன் என்றிருப்பதினுலே அவன் இந்த அரசன் மகளை மணந்திருக்கலாமென்றும் அந்தச் சாஸனங்கள் கூறுகின்றன. ஸிம்ஹவர்மன்மகனுன இரண்டாவது மாதவன், அவிநிதன் என்னும் பெயருடைய இரண்டாவது கொங்கணிவர்மன். (Sringiri Plates, Mysore archaeological report for 1916. P. 33).

மேலைக்கங்கஅரசர் வமிசாவளி.

உத்தேச காலங்கள்.

| | |
|---|---|
| கி. பி. 420 | கொங்கணிவர்மன் (1) |
| கி. பி. 450 | மாதவன் (1) |
| கி. பி. 480 | ஆரியவர்மன் (பல்லவஅரசன் ஸிம்ஹவர்மனுல் முடி சூட்டப்பெற்றவன்). |
| கி. பி. 510 | மாதவன் II என்ற ஸிம்ஹவர்மன் (பல்லவன் ஸ்கந்தவர்மனுல் முடி சூட்டப்பெற்றவன், பெனுகொண்ட சாஸனங்கள்.) |
| கி. பி. 540 | கொங்கணிவர்மன் II அவிநிதன் (Sringeri Plults, Mysore Report 1916. P. 33) E. C. 10. Malur 72) |
| கி. பி. 580 | துருவிநிதன் (Mulbugal Plates-Mysore Report for 1916. P. 44) [Gummareddipuru Plates—Mysore Report for 1912. dated 40th year.] |

விமலன் கொங்கணிகன் என்னும்பெயர்கள் பல்லவவமிசாவளிப் பட்டிகையில் ஏழாவது நூற்றாண்டு முதல் இருந்தன என்று வாயலூர்ச்சாஸனங்களின் உதவியால் நாம் ருசுப்படுத்தியிருக்கிறோம்.

பாஹூர் வமிசாவளியிலும் இந்தப்பெயர்கள் இருப்பதனாலே நிருபதுங்கன் பல்லவன் என்ற கொள்கை பலப்படுகின்றது.

ஆகவே வாயலூர்ச்சாஸனம் வெளிவந்தது முதல் கங்க--பல்லவ வாதம் தகர்ந்துபோயிற்று; நிருபதுங்கன் வமிசவரலாறு தெளிவாயிற்று; உண்மை வெளியாயிற்று; கோபிநாதராயரவர்கள் சொன்னபடி கீழ்வரும் விஷயங்கள் உறுதிபெற்றன.

(1) எட்டாவது ஒன்பதாவது நூற்றாண்டுகளில் பல்லவவமிசம் மட்டுமே நிலைபெற்றிருந்தது.

(2) வேலூர்ப்பாளயம் சாஸனங்களினாலும் பாஹூர்ச் சாஸனங்களினாலும் பின்வரும் வமிசாவளி பெறப்படுகின்றது.

நந்திவர்மன் (பல்லவமல்லன்)
|
தந்திவர்மன்
|
நந்திவர்மன் (வேலூர்ப்பாளம் சாஸன தாதா.)
|
நிருபதுங்கன் (பாஹூர்ச்சாஸன தாதா.)

(2) கால நிர்ணயம்.

முதலில் ஒவ்வொரு அரசனது ஆளுகையின் கால அளவை நிர்ணயம் செய்வோம். தந்திவர்மன், நிருபதுங்கன், காலங்களை வரையறுக்க வருத்தமே இல்லை.

திருச்சனூர்ச்சாஸனம் (No. 262 of 1904) தந்திவர்மன் ஆளுகையின் 51-ஆவது வருஷத்தில் தோன்றியது. அதனாலே தந்திவர்மன் 51 வருஷம் ஆண்டானென்று ஒப்புக்கொள்ளுவோம். நிருபதுங்கன் 26 வருஷம் ஆண்டான் என்பது நிச்சயமே; ஏனென்றால் அவனது சாஸனங்களெல்லாம் அளவிலாத அவனது ஆளுகையின்

26-ஆவது வருஷத்துக்குள் தோன்றியவைகளே. மற்ற இரண்டு அரசர்கள் காலங்களை நிர்ணயிப்பது எளிதானதல்ல. அவர்கள் இருவரும் நந்திவர்மன் என்ற பெயருடையவர்களாயிருக்கிறார்கள்.

ஒரு நந்தியை மற்ற நந்தியிலிருந்து பிரித்தறிவதெப்படி? அவர்களில் ஒவ்வொருவனும் எத்தனை வருஷம் ஆண்டான்?

இந்தவிஷயத்தில் எனக்கு ஒரு முடிவான அபிப்பிராயம் உண்டு. அந்தப்புது அபிப்பிராயத்தை ருசுப்படுத்த இப்பொழுது தொடங்குகிறேன். இந்த அபிப்பிராயத்தை முதலில் வெளிப்படுத்துகின்றவன் நானே. அது உண்மையானதென்று எனக்குப் பூரணநம்பிக்கையிருப்பதனால் அதை நான் மிக உறுதியாக ஒப்புக்கொள்கிறேன்.

நந்திவர்மன் பல்லவமல்லன் 62-வருஷம் ஆண்டான். அவன் பேரன் சுமார் 24-வருஷம் ஆண்டான். என் அபிப்பிராயத்துக்கு ஆதாரமாயுள்ளவை தண்டந்தோட்டம் சாஸனங்களே. அவனது அரசாட்சியின் 58-ஆவது வருஷத்தில் விஜயநந்திவிக்ரமவர்மன் என்ற ஒரு அரசன் இந்தத்தானத்தைச்செய்தான். (S. I. I. Vol II Part V No 99 P. 517).

இந்தச்சாஸனங்கள் வேலூர்ப்பாளயம் சாஸனதாதாவினால்—அதாவது நந்தியின்மகனால்—உண்டுபண்ணப்பட்டவையென்று இதுகாறும் நம்பப்பட்டிருக்கிறது. நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. தண்டந்தோட்டம் சாஸனதாதா நந்திவர்மன்பல்லவமல்லனே.

அதற்குள்ள காரணங்கள் பின்வருமாறு:—

(1) அக்ஷரவடிவசாஸ்திரப்படி (a) தண்டந்தோட்டம் சாஸனதாதாவும் வேலூர்ப்பாளயம் சாஸனதாதாவும் ஒருவனாயிருந்தால், முதலாவது சாஸனம் 58-ஆவது வருஷத்திலும் இரண்டாவது சாஸனம் ஆறாவது வருஷத்திலும் தோன்றியதாகக் காணப்படுவதனால், வேலூர்ப்பாளயம் சாஸனஎழுத்துக்கள் அதிகம் பழமையானவைகளாக இருக்கவேண்டும். ஆனால் அவை பழமையானவைகளாக இருக்கவில்லை. தண்டந்தோட்டம் சாஸனஎழுத்துக்கள் வேலூர்ப்பாளயம் சாஸனஎழுத்துக்களைவிட மிகப் பழமையானவைகளாக இருக்கின்றன.

தண்டந்தோட்டம் சாஸனம் ஸம்ஸ்கிருதப்பகுதியில், ஞ, ஸ, ம, ஷ, ய என்ற எழுத்துக்களை, வேலூர்ப்பாளயம் சாஸனங்களிலிலுள்ள அதே எழுத்துக்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் அவை மிகப்பழமையானவைகளாகத் தோன்றுகின்றன.

ணை, த, ந, ய, ல, தா, நா, யீ, மூ, லை, கொ, தொ, என்ற தமிழ் எழுத்துக்களும் அவ்வாறுகவே இருக்கின்றன.

ஆகையால் தண்டந்தோட்டம் சாஸனநந்தி, வேலூர்ப்பாளயம் நந்திக்கு முன்னோன் என்று ஒப்புக்கொள்ளவேண்டியதாக வருகின்றது.

(b) எழுத்துக்களைத் தனித்தனியாய் எடுத்துநோக்காது, பொதுத்தோற்றத்தைமட்டும் பார்ப்போமானல் தண்டந்தோட்டம் சாஸனங்கள் காசகுடிச்சாஸனங்களையும், வேலூர்ப்பாளயம்சாஸனங்கள் உதயேந்திரத்தில் கண்டெடுக்கப்பட்ட ஹஸ்திமல்லசாஸனங்களையும் ஒத்திருக்கின்றன. திருஷ்டாந்தமாக, தண்டந்தோட்டம்சாஸனங்களில் வரைகள் மிகுந்திருக்கின்றன; மேலும் இரண்டாவது 'இ' அநேகமாய் வட்டமாயிருக்கிறது; இதற்குமாறுக, வேலூர்ப்பாளயம் சாஸனங்களில் நெடியவரைகள் அநேகமாய்க்காணப்படக்கூடவில்லை; மேலும் இரண்டாவது 'இ' பகுதி வட்டமாக இருக்கிறது.

(c) சாஸனங்களை ஒப்பிட்டுப்பாராமல் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப்பார்த்தால் கீழ்வரும் விஷயங்கள் பெறப்படுகின்றன.

நந்தியின்மகனுடைய அரசாட்சியின் 58-ஆவது வருஷத்தில் தண்டந்தோட்டம்சாஸனங்கள் தோன்றினஎன்று நாம் எண்ணினல் அவை 9-ஆவது நூற்றுண்டின் இறுதியில் உண்டாயின ஆகும். ஆனல் நந்தி மூன்றுவது கோவிந்தனல் கி. பி. 804-இல் தோற்கடிக்கப்பட்ட விஷயம் நமக்குத்தெரியும். (G. O. No 919, 28th July 1912. P. 59. Part II No. 7)

இந்தக்காலம் நந்தியினுடைய அரசாட்சியின் இறுதியில் என்றும், அவன் கி. பி. 805-இல் இறந்தான் என்றும் நாம் கொள்வோமானல், அவனுடைய மகனது அரசாட்சியின் 58-ஆவது வருஷம்

(805+58)=863 ஆயிருக்கவேண்டும். தந்தியின்மகன் நந்தியின் காலத்தில் தண்டந்தோட்டம் சாஸனங்கள் தோன்றின என்று நாம் ஒப்புக்கொண்டால் அவை 863-இல் ஆவது அல்லது சிலவருஷங் களுக்குப்பின்-அதாவது 9-ஆவது நூற்றாண்டின் இறுதியில் ஆவது தோன்றியிருக்கவேண்டும். அப்படியானால் அவைகளுக்கும் பாண அரசன் ஹஸ்திமல்லன் சாஸனங்களுக்கும் இடையில் 50-வருஷ வித்தியாசம் ஏற்படும். (S. I. I. Vol II Part III Plate fucing P. 385).

தண்டந்தோட்டம் சாஸனங்களை (S. I. I. Vol II. Plate XVIII) நேரிற்பார்க்கும் எவர்க்கும், அவைகளின் எழுத்துக்கள் 9-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் (அதாவது சுமார் 870-இல்) உள்ளவை என்று சொல்லக்கூடாதபடி அவ்வளவு பழமையானவை களாய் இருக்கின்றவென்று பிரத்யக்ஷமாகும்.

இந்தச்சாஸனங்கள் 8-ஆவது நூற்றாண்டின் பிற்பாதியில் (சுமார் 775) உள்ளவையென்று நான் எண்ணுகிறேன்.

(2) அரைநூற்றாண்டுக்குமேலான அரசாட்சி சரித்திரத்தில் மிக அபூர்வமானது. நந்திபோத்தரசனது அரசாட்சியின் 50-ஆவது வருஷத்திலுள்ள 1915-இல் 10-ஆவது நம்பர் பஞ்சபாண்டவமலை லிகிதம், நந்தியினது அரசாட்சியின் 58-ஆவது வருஷத்திலுள்ள தண்டந்தோட்டம் சாஸனகாலத்தில் தோன்றியதே என்பதற்கு யாதொரு ஸந்தேகமும் இல்லை. இந்த அரசன் தந்தியின்மகனாக இருந்தால் பஞ்சபாண்டவமலைலிகிதம் 9-வது நூற்றாண்டின் பிற் பாதியிலுள்ளதென்று ஒப்புக்கொள்ளவேண்டும். அவ்வாறுகொள்ள முடியவேமுடியாதென்று நான் எண்ணுகிறேன். இந்தலிகிதத்தின் எழுத்துக்கள் பழையனவாக இருக்கின்றன. உதாரணமாக 9-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் 'வ' என்ற எழுத்து வளைவாக எழுதப் பட்டது; பஞ்சபாண்டவமலைலிகிதத்தில் வளைவே இல்லை. (Vide Plate O. P. Ind. Vol IV).

(3) வமிசாவளியின் ஆதாரத்தைப்பார்க்கும்பொழுது ஹிரண்ய வர்மன் என்னும் பெயருடைய ஒரேஒரு பல்லவஅரசனே வாழ்ந் திருந்தான் எனத்தெரிகின்றது. இந்த அரசன் நந்திவர்மன் பல்லவ

மல்லனுடைய தந்தைஎன்று காசகுடிச்சாஸனங்கள் மிகத்தெளிவாக வும், காஞ்சிபுரம் வைகுண்டப்பெருமாள்ஆலயத்துத் தென்புறச் சுவரிலுள்ளலிகிதம் (No 37 of 1888) குறிப்பாகவும் தெரிவிக்கின் றன. தாதாவான நந்திவர்மன் ஹிரண்யவர்மன்மகனென்று தண்டந் தோட்டம் சாஸனங்கள் வியக்தமாகக்காட்டுகின்றன.

ஆகையால் ஒருவித ஸந்தேகத்துக்கும் இடமேயில்லை. தன் அரசாட்சியின் 58-ஆவது வருஷத்தில் தண்டந்தோட்டம் தானத் தைச்செய்த ஹிரண்யவர்மன் மகன் நந்திவர்மன் பல்லவமல்லனே யாம்.

(4) காசகுடிச்சாஸனங்களின்படி நந்திவர்மன் பல்லவமல்லன் கொடுகொள்ளிக்கிராமத்தைத் தானஞ்செய்தபொழுது அந்தக்கிரா மம் ஏகதீரமங்கலம் என்னும் புதுப்பெயர்பெற்றது. இதனால் பல் லவமல்லன் ஏகதீரன் என்னும் பட்டப்பெயர்பெற்றிருந்தான் என விளங்குகின்றது.

தண்டந்தோட்டம் சாஸனதாதாவான நந்தி, அந்தச்சாஸனத் தின் 4-ஆவது சுலோகத்தில் ஏகதீரன் என்றழைக்கப்படுகிறான்.

மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியவர்கள் சொல்வதாவது!— "திருவெள்ளறை Appendix C.—88-ஆவது லிகிதத்தில் சொல்லப் படும் தந்திவர்மன் பிரஹ்மக்ஷத்திரிய வமிசத்தைச்சேர்ந்தவன் என் றும் பல்லவமஹாராஜன் எனப் பட்டப்பெயர்பெற்றிருந்தான் என் றும் தெரியவருகிறது. தந்தி நந்திவர்மன் என்னும் இரட்டைப்பெய ரினால், தந்திவர்மன்மகன் நந்திவர்மன்எனப் பொருள்கொள்ளவேண் டும். பல்லவமகாராஜன் என்ற பட்டப்பெயரினால் அவன் ஒரு பல்லவ அரசனாயிருந்தான் என்று எண்ணலாம். ஒருக்கால் அவன் தெள் ளாற்றில் வென்ற திருச்சுண்ணம்பூண்டி (No 283 of 1901) சாஸன நந்திபோத்தரியனாகவும் இருக்கலாம்."

தெள்ளாற்றில் வெற்றிபெற்ற இவனது சாஸனஎழுத்துக்கள், நந்திவர்மன்பல்லவமல்லன் காலத்தன என்று சொல்லத்தக்கபடி அவ்வளவு பழமையானவல்லவாயிருப்பதால் இந்த அபிப்பிராயம் உறுதியடைகின்றது.

அன்றியும் தெள்ளாற்றுவெற்றியைப்பற்றி நந்திக்கலம்பகம் கூறும் விஷயங்களெல்லாம் நந்திவர்மன்பல்லவமல்லனுக்குப்பொருந்தா.

காடுவெட்டித் தமிழும் பேரரையன் என்பான் ஒருவன் தெள்ளாறு வெற்றிகொண்டவனுக்கும் நிருபதுங்கனுக்கும் ஸமகாலத்தவனயிருந்தான்என்பதை ஆதாரமாக்கி 1907-ஆவது வருஷத்திலேயே (Madras Christian College Magazine. April 1907. Page 8) முதலாவது கூறப்படுபவனே (நந்தி) நிருபதுங்கனது தந்தையென்று கோபிநாதராயரவர்கள் முடிவுசெய்தார்கள்.

ஆகையால் தெள்ளாறுவெற்றிகொண்டோன் தந்திவர்மனுக்கு மகனுகவும் நிருபதுங்கன் தந்தையாகவும் இருத்தல்கூடும். அவனது ஆளுகையில் 22-வருஷத்துக்கப்பாலுள்ள சாஸனமொன்றுமே கிடையாததனுல் (1) நந்திவர்மன்பல்லவமல்லன் 62-வ்ருஷம் ஆண்டானென்றும் (2) நந்திவர்மன் தெள்ளாறெறிந்தவன் 22-வருஷத்துக்குச்சிறிது மேலாக ஆண்டானென்றும் கொள்ளலாம்.

குடிமல்லம்சாஸனம் (No 229 of 1903) இந்த அரசனது ஆளுகையின் 23-ஆவது வருஷத்தில் உள்ளதாக நான் நம்புவதனுல் அவன் சுமார் 24-வருஷம் ஆண்டானென்றும்கொள்ளலாம். குடிமல்லம் சாஸனஎழுத்துக்கள் நிருபதுங்கன் சாஸன (No 228 of 1907) எழுத்துக்களை அநேகமாய் ஒத்திருக்கின்றன.

திருவல்லம் சாஸனம் (No 76 of 1889) நந்தியின் அரசாட்சியின் 62-ஆவது வருஷத்தில் தோன்றியதாகையால், நந்திவர்மன் பல்லவமல்லன் சுமார் 62-வருஷம் ஆண்டானென்று துணியலாம்.

இந்த அரசர்களின் அரசாட்சிக்காலத்தைப் பின்வருமாறு ஒருவாறு நிர்ணயம் செய்துவிட்டோம்.

| | | |
|---|---|---|
| நந்தி—ஏகதீரபல்லவமல்லன் | ... | 62-வருஷம். |
| தந்திவர்மன் ... | ... | 51-வருஷம். |
| நந்திதெள்ளாறெறிந்தவன் | ... | 24-வருஷம். |
| நிருபதுங்கன் ... | ... | 26-வருஷம். |

ஆனால் இந்த அரசர்கள் எப்பொழுது ஆண்டார்கள் என்று ஏகதேசமாகவாவது அறியவேண்டியது அவசியமானது.

அவர்கள் 7-ஆவது நூற்றூண்டுக்குப்பின்னும் 9-வது நூற்றூண்டுக்குமுன்னும் ஆண்டார்களென்று உறுதியாகச்சொல்லலாம்.

(1) ஏழாவது நூற்றூண்டுக்குப்பின் பல்லவமல்லன் ஆளத்தொடங்கினன்.

முதலாவதுபரமேசுவரவர்மன் சளுக்கர்களை கி. பி. 674-இல் தோற்கடித்தான் என்று முன் அத்தியாயத்தில் நாம் ஸந்தேகமறக் காட்டினேம். இங்கே நமக்கு ஒரு சரியான தேதி கிடைத்திருக்கிறது. இதற்கும் நந்திவர்மன் பல்லவமல்லனுடைய ஸிம்ஹாஸனரோகணத்துக்கும் இடையில் (a) முதலாவது பரமேசுவரவர்மன் ஆளுகையின்முடிவும் (b) நீடித்ததாயிருந்த இரண்டாவது நரஸிம்ஹவர்மன் (ராஜஸிம்ஹன்) பூரணஆளுகையும் (c) நீடித்திராத இரண்டாவது பரமேசுவரவர்மன் ஆளுகையும் நிகழ்ந்திருக்கின்றன.

இந்த ஸம்பவங்கள் 40-வருஷத்தில் நிகழ்ந்திருக்கக்கூடுமென்று எண்ணுகிறேன்; ஆகையால் நந்திவர்மன் பல்லவமல்லன் 716 அல்லது 717-க்குமுன் ஆளத்தொடங்கினன் என்பது பொருத்தமானதல்ல.

(2) நிருபதுங்கன் ஆளுகை 900-க்குமுன் முடிவுபெற்றது.

(a) 1903-இல் 28-ஆவது நம்பர்லிகிதம் நிருபதுங்கன் ஆளுகையின் 24-ஆவது வருஷத்திலும் அவனது சிற்றரசனுன பாணஅரசன் வாணவிஜ்ஜாதரன் ஆளுகையிலும் உள்ளது. 1903-இல் 223-ஆவது நம்பர்லிகிதம் பாணஅரசன் மகன் ஆளுகையில் சாகவருஷம் 820 (அதாவது கி.பி. 898-)லும் உள்ளது. ஆகையால் நிருபதுங்கன் ஆளுகையின் 24-ஆவது வருஷம் 898-க்கு முன்னுள்ளதென்றும் 26-ஆவது வருஷம் 900-க்கு முன்னுள்ளதென்றும் நாம் கொள்ளவேண்டும்.

(b) கிராமத்திலுள்ள 1905--735-ஆவது நம்பர்லிகிதத்தினல் முதல் பராந்தகச்சோழன் 907 முற்பகுதியில் ஆளத்தொடங்கினன் என்று அறிகின்றேம். (G. O. No 492 2nd July 1906. P. 68).

ஆகவே 906-ஆவது வருஷம் அவன்தந்தை முதல் ஆதித்யனது அரசாட்சியின் இறுதிவருஷம். ஆனால் திருக்கழுக்குன்றம் லிகிதங்களும் (Ep. Ind. Vol III P. 227), பிரம்மதேசம் லிகிதங்களும் (No 230 of 1915) ராஜகேசரிவர்மனது ஆளுகையின் 27-ஆவது வருஷத்தில் உள்ளவை. இந்த ராஜகேசரிவர்மன் முதல்ஆதித்யனே என்பது திண்ணம். ஏனென்றால் ராஜராஜனுக்குமுன் தீர்க்ககாலம் அரசாண்டிருந்த ராஜகேசரியென்னும் பெயருடைய அரசன் அவன் ஒருவனே. ஆகையால் முதல் ஆதித்யன் சுமார் 880-ஆவது அரசாளத்தொடங்கினான் என்பது திண்ணம்.

தொண்டமானாற்றூர்—துஞ்சின உடையார் என்னும் பட்டப் பெயருடைய இந்த அரசன் அவனது அரசாட்சியின் 21--22-ஆவது வருஷங்களில் வடஆர்க்காடு ஜில்லாவில் தானங்கள் செய்தான். (G. O. No 503 27th June 1907 P. 71 Part II No 29). இந்த அரசன் முதல்ஆதித்யன்என்பதற்கு ஸந்தேகமில்லை; ஏனென்றால் அந்தத்தானத்தில் உண்டான ஒரு தப்பிதம் அவன்மகன் முதல்பராந்தகன்காலத்தில் சரியாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பல்லவ ஸாம்ராஜ்யம் முதல்ஆதித்யனது ஆளுகையின் 21-ஆவது வருஷத்திற்கு முன் அதாவது கி. பி. 900-த்துக்குமுன் அவனால் வெல்லப்பட்டதென்று உறுதியாகக்கொள்ளலாம்.

ஆகையால் இந்நான்கு அரசர்களின் அரசாட்சிக்காலத்தை 717-க்கும் 900-க்கும் இடையில் நாம் குறிப்பிடவேண்டும். நந்தி—62 வருஷம்; தந்தி—51 வருஷம்; நந்தி—24 வருஷம்; நிருபதுங்கன் 26 வருஷம்.

இந்த நான்கு அரசாட்சிக்காலங்களையும் ஒன்றுசேர்த்தால் (62+51+24+26) 163 வருஷங்கள் ஆகின்றன. 715-முதல் 900-வரை 185-வருஷங்கள்.

ஆகையால் பின்வரும் முடிபுகள் ஒருவாறு நிர்ணயமானவையென்று நான் எண்ணுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| நந்திவர்மன் பல்லவமல்லன் | முடிசூட்டப்பெற்றது. | 717—737-களுக்கிடையில் | |
| தந்திவர்மன் | ஷை | ஷை | 779—799 ஷை |

| | | | |
|---|---|---|---|
| தெள்ளாறெறிந்ததந்தி | ஷை | 830—850 | ஷை |
| நிருபதுங்கன் ஷை | ஷை | 854—874 | ஷை |

இந்தக்காலவரையறை பின்வரும் இரண்டு விஷயங்களால் உறுதிபெறுகின்றது. அவ்விருவிஷயங்களையும் பின்னர் ருசுப்படுத்துவோம்.

(1) நந்திவர்மன் பல்லவமல்லன் 741-இடையில் சளுக்கர்களால் தோற்கடிக்கப்பட்டான். தந்திவர்மன் ராஷ்டிரகூடர்களால் 803 இடையில் தோற்கடிக்கப்பட்டான்.

இந்த அரசர்கள் முடிசூடப்பெற்ற இரண்டு தேதிகளுடையவும் சராசரியைக்கணக்காக்கினல் கீழ்வருகிறபடி ஆகும்.

| | |
|---|---|
| நந்திவர்மன்பல்லவமல்லன். | சுமார் கி. பி. 772-இல் முடிசூட்டப்பெற்றான். |
| தந்திவர்மன். | சுமார் 789-இல் முடிசூட்டப்பெற்றான். |
| தெள்ளாற்றுநந்தி. | சுமார் 840-இல் முடிசூட்டப்பெற்றான். |
| நிருபதுங்கன். | சுமார் 864-இல் முடிசூட்டப்பெற்றான். |

ஏறக்குறைய 10-வருஷங்களைத் தவறுதல்களுக்காக வைத்துக்கொண்டால் இந்தக்கணக்கு அநேகமாய்ச்சரியாயிருக்குமென்று நாம் திருப்தியடையவேண்டும்.

ஆனாலும் இந்த 10 வருஷங்களையும் நான் மேற்கூறிய கணக்கிலிருந்து எடுத்துவிடலாமென்று எண்ணுகிறேன். இந்த முடிபுக்குள்ளகாரணங்களைக் கீழேகூறுகின்றேன்.

(1) நிருபதுங்கனது ஆளுகையின் 26-ஆவது வருஷமான இறுதிவருஷத்தில் உள்ள ஆம்பூர்லிகிதங்கள் (Nos 758 of 1896—vide also Ep. Ind. Vol IV P. P. 182 & 183) பிருதிகங்கரையர் இந்த அரசனது ஸமகாலத்தவர்என்று கூறுகின்றன. இந்தப்பிருதிகங்கரையர் முதலாவது பிரித்விபதியாக இருக்கலாம். அவரைப்

பற்றி நாம் கடைசியாக அறியுங்காலம் 879. நிருபதுங்கனது 26-ஆவது வருஷம் இந்தக்காலத்தோடு பொருந்துகிறது என்று நாம் ஒப்புக்கொண்டால் நிருபதுங்கன் 854-க்கு அணித்தாக ஸிம்ஹாஸனம் ஏறினன் என்றும் கொள்ளவேண்டும். இந்தக்காலம் நாம் அதற்குக்குறிப்பிட்ட உத்தேசகாலத்துக்குச் சுமார் 10 வருஷங்களுக்குமுன்.

(2) தஞ்சாவூர் ஜில்லாவில் திருநாகேசுவரத்திற் கண்டெடுக்கப்பெற்ற ராஜகேசரிவர்மனது இரண்டாவது வருஷத்திலுள்ள 1911-இல் 222-ஆவது லிகிதம் முதல்ஆதித்யனுடையதென்று மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரியவர்கள் சொல்லுகிறார்கள்.

1914-இல் உள்ள 101—104—105—127—130—133-நம்பர் லிகிதங்கள் கி. பி. 907-க்குமுன் உள்ளலவயென்று திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். (G. O. No 1260. 25th August 1915. P. 72. Appendix F.) இந்த லிகிதங்கள் முதல்ஆதித்யவர்மனுடையவை என்று மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியவர்கள் சொல்லுகிறார்கள். (Part II No 20 P. 96 of the same Report).

இந்த லிகிதங்கள் எல்லாம் அவனது ஆளுகையின் 5-ஆவது 6-ஆவது 7-ஆவது வருஷங்களில் உள்ளவைகளாயும், திருச்சிஜில்லா திருவெறும்பூரிலுள்ள ஆலயத்தில் செதுக்கப்பட்டவைகளாயும் இருக்கின்றன. ஆகவே இந்த லிகிதங்கள் எல்லாம் முதல்ஆதித்யன் ஆளுகையில் உண்டானவையென்று நாம் ஒப்புக்கொண்டால் இந்த அரசன் தன் அரசாட்சியின் ஆரம்பமுதல் 882-ம் (அவன் அரசாட்சியின் 2-ஆவது வருஷம்) 885-ம் (அவன் அரசாட்சியின் 5-ஆவது வருஷம்) முதல் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களின் ஏகநாயகனுயிருந்தானென்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

ஆனல் நிருபதுங்கன் அவனது ஆளுகையின் 21-ஆவது வருஷத்தில் (Insc. No 17 of 1895) தஞ்சாவூருக்கு ஸமீபமுள்ள கண்டியூரிலும் 22-ஆவது வருஷத்தில் லால்குடியிலும் (Inse. Nos 300×301 of 1901) அரசாட்சிசெய்தான் என்று நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். லால்குடியும் கோவிலடியும் திருச்சினுப்பள்ளிக்கு ஸமீபமுள்ள திருவெறும்பூரின் பக்கத்தில் இருக்கின்றன.

880-க்கு அணித்தாக அரசாட்சி முடியப்பெற்ற நிருபதுங்கன் மரணத்துக்குப்பின் முதலாவது ஆதித்யன் ஆளத்தொடங்கியிருக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகையால் அவன் 854-இல் ஸிம்ஹாஸனம் ஏறியிருக்கவேண்டும். இந்தக்காலம் நாம் அதற்குக்குறிப்பிட்ட உத்தேசகாலமாகிய 864-க்கு 10 வருஷத்துக் குமுன்.

(3) நந்திவர்மன் பல்லவமல்லனது அரசாட்சியின் 21-22-ஆவது வருஷங்களில் உள்ள உதயேந்திரம், காசகுடிசாஸனங்களில் 741-க்கு அணித்தாக நிகழ்ந்த சளுக்கர் படையெடுப்பைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆகையால் அந்த அரசனது ஆளுகையிலுள்ள அவ்வருஷங்கள் இந்த ஸம்பவத்துக்கு முந்தியவைஎன்றும் நந்திவர்மன் பல்லவமல்லன் 719—720-க்குமுன் ஆளத்தொடங்கினன் என்றும் முடிபு கூறலாம்.

இக்காரணங்களால் நாம் நிர்ணயஞ்செய்த உத்தேசகாலங்களில் 10-வருஷங்களைக்குறைத்துப் பின்வரும் வமிசாவளியை உறுதிசெய்யலாமென்று நினைக்கிறேன்.

| | கி. பி. |
|---|---|
| நந்திவர்மன் பல்லவமல்லன். | 717—779 |
| தந்திவர்மன் | 779—830 |
| தெள்ளாறுநந்தி | 830—854 |
| நிருபதுங்கன் | 854—880 |

## (3) பாண்டியர் சரித்திரம்.

சுமார் 741-க்கு அணித்தாக நந்திவர்மன் பல்லவமல்லன் ஆளுகையினுல் சளுக்கர்களின் படையெடுப்பு நிகழ்ந்தது என்றும் 803-க்கு அணித்தாக, தந்திவர்மன் ராஷ்டிரகூடர்களின் கிழாசன் ஆனனென்றும் கூறியுள்ளோம்.

இந்த இரண்டு ஸம்பவங்களையும் தவிர, பல்லவர்கள்செய்த போரெல்லாம் பாண்டியர்களோடே ஆகையால் பல்லவர்சரித்திரத்தை எழுதும் நாம் பாண்டியர்களைப்பற்றியும் பேசவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

வேள்விகுடி வமிசாவளியையும் சின்னமனூர் வமிசாவளியையும், கீழேவருகிறபடி ஒப்பிட்டுப்பார்த்துக்கொண்டு பாண்டியர் சரித்திரத்தைத் தொடங்குவோம்.

வேள்விகுடி தாளம் (Report-for 1908.)

(1) கொடுங்கோன்
|
(2) மாறவர்மன் அவனிசூளாமணி
|
(3) செழியன்சேந்தன்.—(1) ஜயந்தவர்மன்
|
(4) அரிகேசரின் மாறவர்மன் — (2) அரிகேசரின் மாறவர்மன்
|
(5) கோச்சடையன்
|
(6) தேர்மாறன் ராஜஸிம்ஹன்
|
(7) ஜடிலபராந்தகன்

சிறியசின்னமனூர்ச்சாஸனங்கள் Report for 1911.

(1) அரிகேஸரின் பராங்குசன்
|
(2) ஜடிலன்
|
(3) ராஜஸிம்ஹன்
|
(4) வரகுணன்
|
(5) மாறஏகவீரஸ்ரீவல்லப பரசக்ரகோலாஹலன்

பெரிய சின்னமனூர்ச்சாஸனங்கள் (Report-for 1907.)

பெயர்பெற்ற முதல்அரசன் 4-ஆவது நம்பர் அரிகேஸரின் மாறவர்மனே. வேள்விகுடி சாஸனங்கள் பின்வருமாறு கூறுகின்றன:—"நெல்வேலிப்போரில் அவன் வில்வேலியின் கடல்போன்ற படையைஜெயித்து கேரளராஜாவின் சேனையையும் வென்றான்." சுந்தரமூர்த்திநாயனாரின் திருத்தொண்டத்தொகை 8-ஆவது பாட்டில் நெல்வேலிவென்ற நெடுமாறனைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவன்முதல் ஜைந மதஸ்தனாயிருந்தான். திருஞான சம்பந்தர் அவனைச்சைவனாக்க அவனும் 63-நாயன்மாருள் ஒருவனானான். ஆகையால் பக்தனான இந்த அரசனும் மாறவர்மனும் ஒருவனே. என்று கொள்ளப்பட்டால் அவன் சம்பந்தர் காலத்தவனாயிருக்கவேண்டும்.

முதல் நரஸிம்ஹவர்மனோடு வாதாபியைவென்ற சிறுத்தொண்ட நாயனாரின் ஸமகாலத்தவர் சம்பந்தர். (பெரியபுராணம் V. 318) ஆகையால் 4-ஆவது நம்பர் மாறவர்மன் 650-க்கு அணித்தாக வாழ்ந்திருக்கவேண்டும். அவன்மகன் 5-ஆவது நம்பர் கோச்சடையன் 675-க்கு அணித்தாக வாழ்ந்திருக்கவேண்டும்.

வேள்விகுடி சாஸனங்கள் அவனைப்பற்றிப்பின்வருமாறு கூறுகின்றன:—"அவன் மருதூரில் கடல்போன்ற சேனையைவென்று மங்கலபுரம் என்னும் பெரிய பட்டணத்தில்வைத்து மஹாரதனையும் வென்று அழித்தான்—"மருதூர்வெற்றி—கடல்போன்ற படைகள்-மஹா ரதன்—இவையாவை?

கோச்சடையன் அநேகமாய் 675-க்கு அணித்தாக வாழ்ந்திருக்கவேண்டுமென்று சற்று முன்னே கூறினோம். 674-இல்தான் முதல் விக்ரமாதித்யன் உரகபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) பாளயம் அடித்திருந்தான். முதல் விக்ரமாதித்யன் பாண்டியர்களோடு யுத்தம் செய்ததாகக் கேந்தூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன. (Ep. Ind. Vol IX No 29. P. 205) பெருவளநல்லூர்வெற்றியில், ஐக்கியகட்சியார் மூன்றில் பாண்டியன் ஒருவனென்று முன்னமேயே கூறியுள்ளோம். ஆகையால் மேலேகூறப்பட்ட மஹா ரதன் சளுக்க அரசனாக இருக்கலாம்.

கோச்சடையன்மகன் ராஜஸிம்ஹன். இங்கே ஒரு புதிய ஒற்றுமையைக்காண்கிறோம். கோச்சடையனும் முதலாவது பரமேசுரவர்மன்மகனும் சேர்ந்து விக்ரமாதித்யனுக்கு எதிரிகளாய் நின்றார்கள் என்று நாம் கூறினோம். கோச்சடையன் மகனும் முதல் பரமேசுரவர்மன்மகனும் ராஜஸிம்ஹன் என்ற பெயரே வகித்திருந்தார்கள். இங்ஙனம் இருவருக்கும் ஒரேபெயருண்டாகக் காரணம் என்ன? பல்லவ ராஜகுமாரனும் சளுக்கர்என்ற தன் பகைவர்க்கு ஸிம்ஹமுமான ராஜஸிம்ஹன், தன்தந்தை பரமேசுவரவர்மன் அனுமதிப்படி கோச்சடையனோடுசேர்ந்து யுத்தம்செய்யவும், கோச்சடையன் ராஜஸிம்ஹன்மகளை மணம்புரியவும், பாண்டியன் மகனுக்குப்பாட்டனாகிய பல்லவராஜன் பெயர்சூட்டவும் செய்திருக்கலாம்.

அங்கே மறுபடியும் ஒரு புதிய ஒற்றுமையை நாம் காணலாம். நந்திவர்மன் பல்லவமல்லனுக்கு ஒருபெரிய ஆபத்துண்டானதாக உதயேந்திரம் சாஸனங்கள் கூறுகின்றன, (S. I. I. Vol. II Part III P. 376) அவனைப் பல்லவராஜகுமாரனான சித்ரமாயனும் வேறு ராஜகுமாரர்களும் சேர்ந்து எதிர்த்தார்கள். அக்கூட்டத்தில் மண்ணைக்குடிப்போர்புரிந்த பாண்டியனும் சேர்ந்திருந்தான். நந்திவர்மன் பல்லவமல்லன் தன் சத்துருக்களை, சங்கரகிராமத்தில்வைத்துத் தோற்கடித்தான்.

பல்லவமல்லன் உரிமையின்றி அரசனானவன் ஆகையால் சித்ரமாயன் இரண்டாவது பரமேசுவரவர்மனது அரசிளங்குமரனாகவே இருக்கவேண்டும். இவன் தன்பந்துவாகிய ராஜஸிம்ஹ பாண்டியனைத் தனக்கு உதவிபுரியும்படி வேண்டியிருத்தல் வேண்டும். கோச்சடையன் ஏழாவது நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்திருந்ததனால் அவன்மகனான ராஜஸிம்ஹன் 8-ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் நந்திவர்மன் பல்லவமல்லன் ஸிம்ஹாஸனத்தை அநியாயமாகக் கைப்பற்றிய காலத்தில் வாழ்ந்திருந்தான்.

நாம் இப்பொழுது வேள்விகுடி சாஸனங்களைப் பரிசோதனைசெய்வோம், கோச்சடையன்மகன் மண்ணைக்குறிச்சியில் (மண்ணைக்குடியாக இருக்கலாம்) பல்லவர்களை வென்றான் என்று தமிழ்ப்பகுதியிலிருந்து அறிகின்றோம்; ஸம்ஸ்கிருதப்பகுதியிலிருந்து ராஜஸிம்ஹன் பல்லவமல்லனைப் போரில்வென்றானென்று அறிகின்றோம். அரசன்பெயர் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், ஒருவித ஸந்தேகத்துக்கும் காரணம் இல்லை.

மாறவர்மன் அரிகேஸரி பராங்குசன் சங்கரமங்கையில் வைத்து, பல்லவர்களை வென்றான் என்று சின்னமனூர்ப்பெரிய சாஸனங்கள் கூறுகின்றன. சங்கரமங்கை என்பது சங்கரக்கிராமம் என்று மகா-ள-ள-ஸ்ரீ வி. வெங்கய்யா அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த ஸம்பவங்கள் 8-ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தன. அரிகேஸரிபராங்குச ராஜஸிம்ஹன் மகன் ஜடிலபராந்தகன், ஆனைமலைக்குகையிலுள்ள சாஸனங்களில், (Nos 453, 454 of 1906)

கூறப்படும் மாறன் சடையன் பராந்தகனே என்று துணிவதும் இயல்பேயாகும். மேலே கூறிய ஆனைமலைச் சாஸனங்கள், இந்த அரசன் 769-70 இல் வாழ்ந்திருந்தான் என்று உறுதியாகக் கூறுகின்றன.

ஆனைமலைப்பாடல்களைப் பாடியகவி, வேள்விகுடிச் சாஸனங்களையெழுதிய ஆத்ஜபதியைப்போலவே, மாறங்காரியென்ற மதுரகவி மூவேந்தமங்கலப்பேரரையன் என்று அழைக்கப்படுவதனால் மேலே கூறிய விஷயங்கள் உறுதிப்படுகின்றன. இருவரும் கரவந்தபுரத்தில் வசித்தார்கள். ஆகவே மகா-ா-ா-ஸ்ரீ வெங்கய்யா அவர்கள் கூறியபடி இவ்விருவரும் ஒருவரேயாம்.

வேள்விகுடிச் சாஸனங்களின்படி, ஜடிலபராந்தகன் காவேரியின் தென்கரையில் பெண்ணுகடப்போரில் காடவனையும், நாட்டுக்குறும்புச் சண்டையில் ஆயவேளையும், குறும்பர்களையும் தோற்கடித்தான்.

பல்லவர்கள் காடவர் என்றும் அழைக்கப்பட்டனர் என்று நமக்குத் தெரியுமே.

ஜடிலன் என்பான், சென்னை நவீனப்பொருட்காட்சிச்சாலைச் சாஸன தாதாவாகவும், திருப்பரங்குன்றம் லிகிதங்களிலும், (கோபிநாதராயரவர்கள் கூறுகிறபடி) திருவனந்தபுரம் நவீனப்பொருட்காட்சிச் சாலை லிகிதங்களிலும் கூறப்படும் அரசனாகவும், சின்னமனூர்ச்சாஸன தாதாவாகவும் இருக்கலாம். சின்னமனூர்ச் சாஸனங்களில் காணப்படாதவற்றில் அவன் பெயர் இருக்கக்கூடும்.

சின்னமனூர்ப் பெரியசாஸனங்களில் ஜடிலன்மகனான ராஜஸிம்ஹ (பட்டப்பெயர் பெற்றவன்) னைப்பற்றியாவது அவன் பேரன் வரகுணனைப்பற்றியாவது யாதொரு விவரமும் இல்லை.

வரகுணன் மகன் ஸ்ரீமாறன் பரசக்ர கோலாஹலன். அவன் மாய பாண்டியனையும், கேரளனையும், ஸிம்ஹளராஜனையும், பல்லவனையும், வல்லபனையும் கீழடக்கினான் என்று, சின்னமனூர்ச் சாஸனம் ஸம்ஸ்கிருதப்பகுதி கூறுகின்றது. அவன் குன்னூரிலும் சிங்களத்திலும், விழிஞத்திலும் வெற்றிபெற்றானென்றும், குடமூக்கில் வைத்துத்தன்னை எதிர்த்த பல்லவர்களையும், சோழர்களையும், கலிங்கர்களையும், மகதர்களையும் தோற்கடித்தான் என்றும் தமிழ்ப்பகுதி கூறுகின்றது.

மகா-ா-ா-ஸ்ரீ வெங்கய்யா அவர்கள் கூறுவதாவது:—"அரசு செலுத்தும் அரசனுக்கு எதிரியாகப்பாண்டியராஜ குமாரன் நின்றான் என்று சொல்லப்படுவதனால் ராஜவமிசத்தில் ஒற்றுமைக்கேடும், குழப்பங்களும் இருந்தனவென்று அறியலாம்" ஸ்ரீமாறனுக்கு சிங்களரும் சத்துருக்களாயிருந்தார்களென்று கூறியுள்ளோம். சிங்களராஜன் மாய பாண்டியனோடு சேர்ந்தான் என்பதிலிருந்து நாம் ஒருபெயர் ஒற்றுமையைப் பெறுகிறோம்.

மஹாவம்சம் 51-ஆவது அதிகாரத்தில் (Translation of Wifesinha) சொல்லப்படுவதாவது (No. 27). "அதே ஸமயத்தில் பாண்டு ராஜ்யத்தை அழிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பாண்டியராஜனால் அவமதிக்கப்பட்ட ஒரு பாண்டியராஜகுமாரன் இங்கேவந்தான்."

சிங்கள அரசனான இரண்டாவதுசென்னன் பாண்டியராஜகுமாரனோடு சேர்ந்து மதுரைப்பட்டணத்தை முற்றுகை செய்தான்.

பாண்டியராஜன் (No. 38) ஒரு யானைமீதேறி, போர்க்களத்திலிருந்து ஓடி, வேறிடத்தில் உயிர்துறந்தான். உடன்தானே அவன் மனைவியும் அவனோடு உயிர்துறந்தாள்.

மஹாவம்சப்படி இரண்டாவது சேனன் 866 முதல் 901-வரை அரசுபுரிந்தான். இங்கே மஹாவம்ச காலத்தைப்பற்றிப் பின்னும் சிறிது கூறவேண்டும்.

சோழர்கள் சிங்கள அரசர்களோடு பகைகொண்டு சிங்களத்தைப் பலமுறை தாக்கினார்கள். இந்தப்படையெடுப்புகளின் திட்டமான காலம் இன்னதென நமக்குத்தெரியும்.

(1) முதலாவது பராந்தகன் தன் அரசாட்சியின் 37-ஆவது வருஷத்துக்குச் சிறிதுமுன்னே 942-க்கு அணித்தாக சிங்களத்தைத் தாக்கினான். (Tiruppalatnai Insc.)

(2) ராஜராஜன் 1002-க்கு அணித்தாக சிங்களத்தைவென்றான். இந்தப்படையெடுப்புகளில் முதலாவது, மூன்ற[illegible] உதயன்காலத்திலும் இரண்டாவது, ஐந்தாவது மஹிந்தன் கா[illegible]லும் நிகழ்ந்ததாக மஹாவம்சம் கூறுகின்றது.

ஆனால் மஹாவம்சத்தில் கூறும் தேதிகள் சரியாயிருக்கவேண்டு மானால் சிங்கள காலநிர்ணயத்திலிருந்து 24-வருஷங்களைக் குறைக்க வேண்டும்.

அன்றியும் முதலாவது நரஸிம்ஹவர்மனது சிங்களப்படையெடுப் பைப்பற்றிப் பேசியபொழுது, மஹாவம்சகாலங்களிலிருந்து சுமார் கால் நூற்றாண்டு காலத்தைக் குறைக்க நமதுகால நிர்ணயம் ஒத்துவந்த தை முன்னரே அறிந்திருக்கிறோம்.

இதை ஒப்புக்கொண்டால் மஹாவம்சகால நிர்ணயத்தை நம்பி இரண்டாவது சேனன் 841-முதல் 876-வரை அரசாண்டான் என்று உறுதியாகக்கூறலாம். தன் பந்துவால் ஸிம்ஹாஸனத்திலிருந்து நீக்கப் பட்ட பாண்டியராஜன் ஸ்ரீமாறன் பரசக்ரகோலாஹலனே.

இன்னொரு விஷயம் ஒத்துவருவதையும் நாம் இங்கே கவனிக்க வேண்டும். ஸ்ரீமாறன் பல்லவர்களைக்குடமூக்கில்வைத்து எதிர்த்தான் என்று சின்னமனூர்ச் சாஸனங்கள் கூறுகின்றன.

9-ஆவது நூற்றாண்டில் புராதன பாண்டியர்கள் காலத்தில் கும்ப கோணம் குடமூக்கு என வழங்கிவந்ததென்பதற்கு ஸந்தேகமேயில்லை. கும்பகோணம் நாகேசுவர ஆலயத்தில் உள்ள மாறன் சடையன் பாண் டியன்லிகிதத்தில் (No 13 of 1908) இந்தப்பட்டணம் திருக்குடமூக்கு என அழைக்கப்பட்டிருக்கிறது.

நிருபதுங்கள் தன் அரசாட்சியின் முதல் எட்டு வருஷங்களில் அதாவது 854 முதல் 863 வரை—அரிசித நதிக்கரையில் பாண்டியர் களை வென்றான் என்று பாஹூர்ச் சாஸனங்களிலிருந்து நாம்முன்ன மேயே அறிந்துள்ளோம். அரிசித்நதி கும்பகோணத்துக்கருகே ஓடும் அரிசிலாறே என்று கோபிநாதராயரவர்கள் கூறுகிறார்கள்.

ஸ்ரீமாறன் 841-முதல் 876-வரை அரசாண்ட இரண்டாவது சேனனுக்கு ஸமகாலத்தவன் என்றும் நிருபதுங்கனது அரசாட்சியின் முதல் எட்டுவருஷங்களும் 854-முதல் 863-க்குள் விழுந்தன என்றும் நாம் கூறியுள்ளோம். ஆகையால் பாண்டியராஜ்யத்தில் சிங்களர்படை யெடுத்துவந்த ஸமயத்தைத் தவறவிடாது பல்லவநிருபதுங்கன் ஸ்ரீமா றனை எதிர்த்துச்சென்று அவனைக்கும்பகோணத்தருகிற் புறங்கண்டா னென நாம்கருதலாம். நிருபதுங்கன் இரண்டாவது சேனனை ஒத் திருந்தான் என்ற விஷயத்தை, ராமனுடைய புகழைப்போல நிருபதுங் கனது புகழும் கடல்கடந்து பரவியிருந்ததெனக்கூறும் பாஹூர்ச்சாஸ னங்கள் வற்புறுத்துகின்றனபோலும். பாண்டியராஜன் கொல்லப்பட் டான் என்று சிங்களசரித்திரங்கள்கூறுகின்றன. அது 860-க்குஅணித் தாக நிகழ்ந்திருக்கவேண்டும். ஆகவே பல்லவசரித்திரத்தைச்செவ் வையாகஅறிவதற்[illegible]ண்டியர் சரித்திரமும் அறியவேண்டியதுமுக்கி யமானதென்று [illegible]றும் கூறியவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

# பல்லவ வமிசாவளி.

யுவமஹாராஜன் சிவஸ்கந்தவர்மனது தந்தை
காஞ்சியரசன் சுமார் கி. பி. 200) (மயிதவோலு)

காஞ்சியரசன் சிவஸ்கந்தவர்மன்
(ஹிரஹடகல்லி)

காஞ்சியரசன் விஜயஸ்கந்தவர்மன்
(குண்டூர்ஜில்லா)

ஸ்கந்தவர்மன்
|
குமாரவிஷ்ணு I
|
புத்தவர்மன்
|
காஞ்சியரசன் குமாரவிஷ்ணு II

} செந்தலூர்

விஷ்ணுகோபன் (சுமார் கி. பி. 338) (அல்லாஹாபாத்லிகிதத்தில் கூறப்படும் காஞ்சியரசன்)
|
குமாரவிஷ்ணு (கி. பி. 366 சுமார்)
|
ஸ்கந்தவர்மன் (சுமார் கி. பி. 394)
|
வீரவர்மன் (சுமார் கி. பி. 422)
|
ஸ்கந்தவர்மன் (சுமார் கி. பி. 450)
|

ஸிம்ஹவர்மன் (சுமார் கி. பி. 478)

ஸ்கந்தவர்மன் (சுமார் கி. பி. 506)

நந்திவர்மன் I (காஞ்சியரசன் சுமார் கி. பி. 534)

யுவமஹாராஜன் விஷ்ணுகோபன் (சுமார் கி. பி. 478)

ஸிம்ஹவர்மன் (சுமார் கி. பி. 506)

விஷ்ணுகோபவர்மன் (பலக்கட அரசன் சுமார் கி. பி. 534)

ஸிம்ஹவர்மன் (கி. பி. 562 சுமார்)

ஸிம்ஹவிஷ்ணு (சுமார் கி. பி. 590)

மஹேந்திரவர்மன் I (சுமார் கி. பி. 618)

நரஸிம்ஹவர்மன் I (சுமார் கி. பி. 646)

மஹேந்திரவர்மன் II (சுமார் கி. பி. 660)

பரமேசுவரவர்மன் I (சுமார் கி. பி. 674)

நரஸிம்ஹவர்மன் II (சுமார் கி. பி. 700)

பரமேசுவரவர்மன் II (சுமார் கி. பி. 715)

பீமவர்மன்

புத்தவர்மன்

ஆதித்யவர்மன்

கோவிந்தவர்மன்

ஹிரண்யவர்மன்

|

நந்திவர்மன் II (சுமார் கி. பி. 742)

|

தந்திவர்மன் (கி. பி. 800. சுமார்.)

|

நந்திவர்மன் III (சுமார் கி.பி. 840)

|

நிருபதுங்கன் (சுமார் கி. பி. 875.)

(பிறகு)

அபராஜிதன் (9-ஆம் நூற்றாண்டி
னிறுதியில்)

## அத்தியாயம் V.

## நந்திவர்மன் சரித்திரம்,

### (1) நந்திவர்மன் பல்லவமல்லன் (சுமார் கி. பி. 717—779.)

இரண்டாவது பரமேசுவரவர்மன் இறந்தபொழுது யார்பட்டத்துக்கு வரவேண்டுமென்று ஒரு விவாதம் உண்டாயிருக்கலாம். ஸிம்ஹவிஷ்ணுவமிசத்தவனும் உதயேந்திரம் சாசனங்களில் சித்ரமாயன்எனக் கூறப்பட்டவனுமான ஒரு ராஜகுமாரன் அரசிளங்குமாரனாக இருந்திருக்கலாம். அக்காலத்தில் ஹிரண்யவர்மன் என்ற ஒரு பல்லவராஜகுமாரனும் இருந்தான். அவன் ஸிம்ஹவிஷ்ணுவின் சகோதரன்பின் வந்தோன் என உரிமைபாராட்டினான். அவன் ராஜ்யத்தில் மிக்கசெல்வாக்குடையவனாக இருந்தான். அவனுக்குச்சில பிரபுக்களும் உதவியாக நின்றார்கள். அவர்களுள் முத்தரையன் என்பவன் ஒருவன். அவன் பல்லவர்களுக்குக்கீழ்ச்சிற்றரசனாகத்தஞ்சைக் குறுநிலத்தை ஆண்டுவந்தான். தஞ்சாவூர் பாண்டிநாட்டுக்கும் பல்லவராஜ்யத்துக்கும் இடையே ஒரு இடைராஜ்யமாக இருந்தது. (Vide some Insc. of the muttariyars by T. A. Gopinatha Rao. Journal of the S. I Association July 1911.)

ஹிரண்யவர்மனது வேறொருநண்பன் உதயசந்திரன்; அவன் காஞ்சிபுரத்துக்கு ஸமீபமாக வேகவதிக்கரையிலுள்ள வில்வலத்தின் (வில்லிவலம்) தலைவனாயிருந்தான். (உதயேந்திரம் சாஸனங்கள்.)

ஹிரண்யவர்மன் 'மைன'ராகவிருந்த தன்மகன் நந்தியை அரசனாக்கி, காஞ்சியில் வைத்து முடிசூட்டமுயன்றது அனுகூலமாய்முடிந்தது. G. O. No. 492, 2nd July 1906. P. 61.

ஆனால் சித்ரமாயன் அனேக அரசர்களின் உதவியைப்பெற்றான். அவர்களுள் அவன் பந்துவான பாண்டியன் ராஜசிம்ஹனும் (தேர்மாறன்) ஒருவன். அன்றியும் ராஜசிம்ஹன் மாமனான மாளவ அரசனும் ராஜஸிம்ஹபாண்டியனது பந்துவான மேலைக்கங்க அரசனும் அவனது நண்பர்களாகச்சேர்ந்திருக்கலாம்.

பாண்டியர்கள் சங்கரமங்கையிலும் மண்ணைக்குடியிலும் (மண்ணிக்குறிச்சி) தோற்கடிக்கப்பட்டார்கள். மண்ணைக்குடியென்பது திருவிசலூருக்கும் கும்பகோணத்தின் பக்கத்திலுள்ள இடவைக்கும் ஸமீபமான மண்ணியாயிருக்கலாம்.

மற்றச்சத்துருக்கள் நாலுதிசையிலும், கீழச்சளுக்கர் ராஜ்யம் வரை ஓட்டப்பட்டார்கள். அக்காலத்தில் விஷ்ணுராஜன் (விஷ்ணுவர்த்தனன் III) கீழச்சளுக்க அரசனாயிருந்தான். (கி. பி. 709-746)

741-க்கு அணித்தாக இரண்டாவது விக்கிரமாதித்தன் (733-746.) நான்காவதுமுறை, துண்டாகத்தை (தொண்டைமண்டலம்)த் தாக்கினான். (இது சளுக்கரின் நான்காவதுபடையெடுப்பு.)

'கேண்டூர்ச்சாஸனங்களில் சளுக்கர்சொல்வதாவது:- "இரண்டாவது விக்கிரமாதித்தன், போர் ஆரம்பத்திலேயே தன்னையெதிர்த்த நந்திபோத்தவர்மன் என்ற பல்லவ அரசனைப்புறங்கண்டு, கடுமுகவாதித்ரம் ஸமுத்ரகோஷம், கட்வாங்கத்வஜம் முதலிய சில ஸங்கீதவாத்யங்களையும், அநேக மதங்கொண்டயானைகளையும் தம் ஒளிக்கதிர்க்குழாத்தின் பிரகாசத்தால் விரட்டப்பட்ட இருளையுடைய சிவப்புக்கற்குவியலையும், கைப்பற்றி, யாதொருநாசமும்செய்யாமல் தென்றிசைத்தேவிக்கு அணிமேகலையாம் காஞ்சியுள் நுழைந்தான். அவனது இடையறுக்கொடையால் பிராமணர்களும் வேறு கதியில்லா ஏழைகளும் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். பாண்டியர், சோழர், கேரளர், களப்ரர் முதலிய அரசர்களை வருத்திக்கொண்டிருந்த நரஸிம்ஹபோதவர்மன் கட்டிய ராஜஸிம்ஹேசுவரர் முதலிய தேவதைகளின் சிவாலயத்துக்கும் பொற்குவியல் திரும்பவளித்துப் பெரும்புகழ்பெற்றான்". (Ep. Ind. Vol. IX. No. 29. P. 205.)

இறுதிவாக்கியத்தால் பாண்டியர்கள் பல்லவர்களோடு சேர்ந்து கொண்டார்கள் என்று அறியலாம்.

காஞ்சிபுரம் கைலாஸநாதசுவாமி ஆலயத்தில் இரண்டாவதுவிக்ரமாதித்தன் கட்டளையால் உண்டான ஒரு லிகிதத்தினால் அவன் அக்கோயிலுக்குத் தானம் செய்தவிஷயம் உறுதிப்படுகின்றது. (Ep. Ind. Vol. III. No. 48. P. 359.)

நந்திவர்மன் பல்லவமல்லன் நெடுங்காலம் ஆண்டான் என்று ஐந்து பிரமாணங்களால் உறுதிப்படுகின்றது.

47-ஆவது வருஷம் விரிஞ்சிபுரம் லிகிதம் (No. 55. of 1881.)

50-ஆவது வருஷம் பஞ்சபாண்டவமலை (10 of 1895.)

52-ஆவது வருஷம் சதுப்பேரி. (27 of 1887.)

58-ஆவது வருஷம் தண்டன்தோட்டம் தாம்பிரசாஸனங்கள்.

62-ஆவது வருஷம் திருவல்லம் லிகிதம். (76 of 1889.)

இறுதி லிகிதத்தினால் மாவலிராயர் என்ற பாண அரசன் பல்லவர்களுக்குக்கீழ்ச் சிற்றரசனாயிருந்தானென்று தெரியவருகிறது.

(2) தந்திவர்மன். (சுமார் கி. பி. 779—830.)

நந்திவர்மன் பல்லவமல்லனுக்கு ரேவா என்னும் ஓர்மனைவியிருந்தாளென்றும், அவள் ரேவாநதியைப்போல் ஒரு பெரிய அரசனிடமிருந்து (அல்லது பெருமலையினிடமிருந்து) பிறந்தாளென்றும் அவளிடமிருந்து தந்திவர்மன் பிறந்தானென்றும் வேலூர்ப்பாளையம் சாஸனங்கள் கூறுகின்றன. (S. I. I. Vol .II. Part. V. P. 511.) தந்தி என்னும்பெயர் ராஷ்டிரகூடரிடமிருந்து உற்பத்தியானது. ரேவா என்பவள் தந்தியென்னும் பெயருடைய ராஷ்டிரகூட அரசனது மகளாக இருக்கலாம்.

இதனால் பல்லவர்களுக்கும் ராஷ்டிரகூடர்களுக்கும் இக்காலத்து ராஜாங்க ஸம்பந்தம் இருந்ததென்று ஒருவாறு விளங்கும்.

780-இல் ஒருக்கால் தந்திவர்மன் அரசாட்சி ஆரம்பத்தில் காஞ்சியரசன், துருவனோடுள்ள சண்டையில் இரண்டாவது கோவிந்தனுக்கு உதவிபுரிந்தான். ஆனால் பின்கூறப்பட்டவன் தன் சகோதரனை ஸிம்ஹாஸனத்திலிருந்து நீக்குவதற்குச்செய்த முயற்சி அனுகூலமாயிற்று. (Ep. Ind. Vol. IV. No. 17. P. 104.)

இந்தக்காலத்தில் பல்லவர்கள் காஞ்சியில்மட்டுமன்றி, தற்காலத்துப் புதுக்கோட்டைராஜ்யம் வரையிலுமுள்ள காவேரிக்கரையிலுள்ள நாடு

களையும் ஆண்டிருந்தார்கள் என்பதில் ஸந்தேகமில்லை. வாஸ்தவத்தில் அவனது அரசாட்சியின் ஐந்தாவது வருஷத்தில் (புதுக்கோட்டையிலுள்ள) குன்றாண்டார்கோவிலுக்கும் (No. 348 of 1914.) திருச்சிராப்பள்ளிக்கு ஸமீபமுள்ள திருவெள்ளரைக்கும் (No. 541. of 1905.) தானங்கள் செய்திருக்கின்றான். அவனது ஆறாவது வருஷத்தில் ஜெஞ்சியின்பக்கமுள்ள தொந்தூரிலும் (No .283. of 1916) உத்தரமல்லூரில் (செங்கற்பட்டுஜில்லா) 7-ஆவது வருஷத்தில் 1898-இல் 80-ஆவது நம்பரிலும், 9-ஆவது வருஷத்தில் 1898-இல் 74-ஆவது நம்பரிலும், 10-ஆவது வருஷத்தில் 1898-இல் 51 - ஆவது நம்பரிலும் லிகிதங்கள் தோன்றியிருக்கின்றன.

திருவல்லிக்கேணி (சென்னை) லிகிதங்களும் (No. 234. of 1903 Ep. Ind. Vol. VIII. No. 29. P. 291.) காஞ்சிக்கருகே கூரம் லிகிதங்களும் (No. 35. of 1900.) அவனது அரசாட்சியின் 12-வது வருஷத்தில் தோன்றியவைகளாக இருக்கின்றன.

16-ஆவது வருஷத்திலும் தந்திவர்மன் முத்தரையர் ராஜ்யத்தில் ராஜ்யபாரம் நடத்தியிருந்தான். ஏனென்றால் விடேல விடுகுமுத்தரையன் என்பவன் மலையடிப்பட்டிலிகிதங்களிரண்டில் தான் தந்தியின்கீழ்ச் சிற்றரசனே என்று ஒப்புக்கொண்டிருக்கிறான். (Nos. III. & IV. P. 23. Some inscriptions of Muttarayars - Journal of S. I. association. July 1911.)

உத்தரமல்லூர் லிகிதம் (No. 61. of 1892.) அவனது அரசாட்சியின் 21-ஆவது வருஷத்தில் அதாவது நம்முடைய கணக்குப்படி 800-இல் உள்ளதாக இருக்கிறது.

இந்தக்காலத்துக்கு அணித்தாகத்தான் மூன்றாவதுகோவிந்தன் காஞ்சியில் ஆண்ட தந்திகளைவென்று, தந்திவர்மனைத்தனக்கு இறை செலுத்தும்படி செய்தான். (Ind. Ant. Vol. IX. P. 127.)

இந்த ஸம்பவத்தினால் பல்லவர்களின் சக்தி அனேகமாய்க்குன்றியிருக்கலாம்.

உண்மையாக தந்தி அரசாட்சி 21-ஆவது வருஷத்துக்கும் 49-ஆவது வருஷத்துக்கும் இடையில் (800—828) ஒரு லிகிதமாவது இல்லாமலிருப்பதும் கவனிக்கத்தக்கது.

தந்தியின் அரசாட்சி முடிவிலுள்ள இரண்டு லிகிதங்கள் கிடைத்திருக்கின்றன. அவனது 49-ஆம் ஆண்டில் பாணவரசன் விஜயாதித்யன் குடிமல்லத்துக்கு ஒருதானமளித்தபொழுது (No. 226 of 1903) அப்பாணவரசன் பல்லவர்களுக்குக்கீழ்ப்பட்டே இருந்தான். திருச்சானூர் லிகிதம் தந்தியின் 51-ஆவது வருஷத்தில் உண்டாயது. (No. 262 of 1904).

பல்லவராஜ்யத்தின் தென்பாகத்தில் விசேஷமாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் தந்தியின் அரசாட்சியின் இறுதிக் காலத்தில் லிகிதங்கள் ஒன்றுவது இல்லாமலிருப்பதும் கவனிக்கத் தக்கது.

காவேரிநதிக்கரையிலுள்ள ஞாபகச்சின்னங்கள் ஒன்றிலாவது 35 வருஷங்களுக்கு—அதாவது 16-ஆவது வருஷம்முதல் (மலையடிப்பட்டி) அவன் அரசாட்சி முடிவுவரையிலும் தந்தியின் பெயர் சொல்லப்படவே இல்லை.

795-முதல் 830-வரையுள்ள இந்த நீண்டகாலத்தில் ஒருதானமாவது செய்யப்படாமலிருந்தது மிக வியப்பானதே. இதிலிருந்து நாம் ஒன்று ஊகிக்கலாம்.

கீழே வரும் 11 லிகிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

| | |
|---|---|
| No. 17 of 1907 | No. 13 of 1908 |
| No. 51 of 1895 | No 10 of 1899 |
| No. 414 of 1904 | No. 84 of 1910 |
| No. 413 of 1904 | No. 105 of 1905 |
| No. 364 of 1907 | No. 690 of 1905 |
| No. 358 of 1907 | |

இந்த லிகிதங்களினால் பல்லவராஜ்யத்தின் தென்பாகத்தில், மாறன் சடையன் என்ற ஒரு பாண்டியனது அரசாட்சியின் 4-ஆவது வருஷம் முதல் 16-ஆவது வருஷம்வரை பாண்டியர் வாசம் செய்தார்கள் என்று தெரியவருகிறது. இவ்வாறு வசித்தது படையெடுப்புக்காரணமாகவெனத்தோன்றுகிறது.

தந்திவர்மனுக்குப் பின்வந்த பல்லவ அரசர்காலத்தில் பாண்டியர்கள் இவ்வாறு வசித்தார்கள் என்று எண்ணமுடியாது. ஏனென்றால் தெள்ளாறு நந்தியின் அரசாட்சி ஆரம்பம்முதல் பராந்தகச் சோழன் வருகைவரையுள்ள பலலிகிதங்கள் கிடைத்திருக்கின்றன. இவைகளைப் பரிசோதனைசெய்தால் இந்தக்காலத்தில் பாண்டியர் படையெடுப்பு நிகழ்ந்ததாக எண்ண இடமில்லை- உண்மையாக தந்திமகன் நந்தி அரசாட்சியின் ஆறுவது வருஷத்திலும் (திருவெள்ளறை) 10-ஆவது வருஷத்திலும் (தில்லஸ்தானம்) 12-ஆவது வருஷத்திலும் (செந்தலை) 18-ஆவது வருஷத்திலும் (கோவிலடி, திருச்சென்னம் பூண்டி) 22-ஆவது வருஷத்திலும் (திருப்பலாத்துறை) உள்ள லிகிதங்களும் நிருபதுங்கன் அரசாட்சியின் 7-ஆவது வருஷத்திலும் (நார்த்தாமலை) 18-ஆவது வருஷத்திலும் (கோவிலடி) 21-ஆவது வருஷத்திலும் (கண்டியூர்) 22-ஆவது வருஷத்திலும் (லால்குடி, கோவிலடி) உள்ள லிகிதங்களும், சோழராஜன் ஆதித்யனது 2-ஆவது, 5-ஆவது 6-ஆவது 7-ஆவது வருஷங்களிலுள்ள (திருவெறும்பூர்) சாஸனங்களும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களிற் காணப்படுகின்றன.

ஆகையால் தந்திவர்மன் ஆளுகைக்கப்பால் பாண்டியர்கள் காவேரி நதிக்கரையை உடையராயிருந்தார்கள் என்று எண்ணமுடியாது.

ஆகையால் அவர்கள் படையெடுப்பு தந்தியின் அரசாட்சிமுடிவில் அதாவது 825-இல் என்று எண்ணுகிறேன். பாண்டியர் சரித்திரத்தைப்பற்றிப் பேசியபொழுது, இந்தத்தேதியைத்தான் நாம் வரகுணனுக்குக் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகையால் காவேரிநதிக்கரையிலுள்ள லிகிதகர்த்தாவாகிய மாறன்சடையனே 'சோழமண்டலத்தையும் தொண்டைமண்டலத்தையும் மதுரையோடுசேர்த்த' வரகுணன் என்று தோற்றுகிறது. Prinsep's lists made from Halasya mahatmyam and Tiruvilayadal puranam.)

ஒருகால் இந்த வரகுணனே முதலாவது சேனன்காலத்தில் அதாவது 821-முதல் 841-வரை (மஹாவம்சகாலத்தில் 25-வருஷம் குறைத்து) சிங்களத்தை வென்றிருக்கவேண்டும்.

அது எப்படியிருந்தாலும் மேலேசொன்ன லிகிதங்களின் உதவியால், பல்லவராஜ்யம் தாக்கப்பட்ட விஷயத்தை நாம் விளக்கக்கூடும்.

சோழதேசத்திலுள்ள இடவைக்கு ஒருசேனையை அனுப்பியதோடு படையெடுப்பு ஆரம்பமாயிற்று. (Insc. No. 690 of 1905) இவ்வூர் வரகுணமஹாராஜன் சாசனமொன்றையுடைய (No. 17 of 1907) திருவிசலூர் இருக்கும் மண்ணிநாட்டில் (S. I. I. Vol. II Part V. Introduction Page 23). அதே பெயருடைய ஊராக இருத்தல்கூடும்.

திருச்சிராப்பள்ளி, அம்பாசமுத்திரம் லிகிதங்களால் வரகுணன் வேம்பிலை அழித்தானென்று தெரியவருகிறது. இந்த வேம்பில் திருவிசலூராயிருக்கலாம். அதற்கு வேம்பற்றூர் என்று புராதனப்பெயருண்டு. சோழநாடெல்லாம் வெல்லப்பட்டது; ஏனெனில் மாறன் சடையன் காலத்தில் பொறிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி (No. 414 of 1904), தில்லைஸ்தானம் (No. 51 of 1895) சாஸனங்கள் வரகுணனைப் பற்றிக்கூறுகின்றன.

இந்தச் சாஸனங்களெல்லாம் 4-ஆவது வருஷத்தியனவாயிருப்பதால் இந்தப்போர் அக்காலத்தில் நிகழ்ந்திருக்கலாம்.

கீழ்வரும் லிகிதங்கள் பல்லவராஜ்ய ஆக்ரமணம் நிலைபெற்றிருந்ததென்று தெரிவிக்கின்றன.

| | | |
|---|---|---|
| 4-ஆவது வருஷத்தில் | திருச்சியில் | (No. 413 of 1904) |
| 6-ஆவது ,, | ஆடுதுறையில் | (No. 364 of 1907) |
| 8-ஆவது ,, | ,, | (No. 358 of 1907) |
| 8-ஆவது ,, | கும்பகோணத்தில் | (No. 13 of 1908) |
| 10-ஆவது ,, | செந்தலையில் | (No. 10 of 1899) |
| 13-ஆவது ,, | திருவெள்ளறையில் | (No. 84 of 1910) |

வரகுணன் காலத்தை நிர்ணயம் செய்வதற்கு, செந்தலை லிகிதம் மிகவும் முக்கியமானதென்று நினைக்கிறேன். விடேலவிடுகுமுத்தரையன் தந்திவர்மன் அரசாட்சியின் 16-ஆவது வருஷத்தில் வாழ்ந்தான்

என்றும் (மலையடிப்பட்டி லிகிதங்கள்) அவன் மாறன்சடையன் அரசாட்சியின் 10-ஆவது வருஷத்தில் நியமத்தில் (செந்தலை) ஒருதானம் செய்தானென்றும் நாம் அறிகின்றோம்.

இதனால் வரகுணபாண்டியன் படையெடுப்பு, தந்திவர்மன் காலத்தில் நிகழ்ந்ததாகத்தெரிகிறது.

வரகுணமஹாராஜனது அரசாட்சியின் 16-ஆவது வருஷத்திலுள்ள அம்பாசமுத்திரம் லிகிதமே (No. 105 of 1905) பல்லவராஜ்ய பிரவேசத்தைப்பற்றிய கடைசிலிகிதம். இந்தக்காலத்தில் வரகுணன், பெண்ணார் நதிக்கரையில் தொண்டைநாட்டிலுள்ள அரைசூரில் பாளயம் அடித்திருந்ததாக அந்த லிகிதம் கூறுகின்றது.

இந்தக் காலத்தில் பாண்டியர்கள் பல்லவராஜ்யத்தின் பாதியைப் பிடித்துக் காஞ்சிபுரத்தையும் தாக்க முயன்றார்கள்போலும்.

படையெடுத்து வந்தவனைத்தோற்கடித்த பல்லவ அரசன் யார்? அதைக்கண்டுபிடிக்க முயல்வோம்.

## (3) தெள்ளாறு நந்தி (சுமார் 830—854).

தந்தியின் மகனான நந்தியின்தாய் அக்களனிம்மதியென்ற ஒரு கடம்பராஜகுமாரி. இந்த விஷயம் அடங்கியுள்ள வேலூர்ப்பாளயம் சாஸனங்கள், தந்தையின் ஸிம்ஹாஸனத்தைப்பெறுவதற்கு அவன் போர்செய்யவேண்டிவந்ததாகக் கூறுகின்றது. (V. 20) "இந்த நந்திவர்மன் தன் புஜபலத்தினால் இருமாப்படைந்து, பிறருக்கு அடைய முடியாத பல்லவராஜ்யத்தை, போர்க்களத்தில் எதிரிகளையெல்லாம் கொன்று தொலைத்தபிறகு, பெற்றான்" பத்தாவது வருஷத்தில் உள்ள தில்லைஸ்தான லிகிதம் (No. 52 of 1895) நந்திக்குத் தெள்ளாறெறிந்த என்னும் அடைமொழி கொடுப்பதால், அவனது முதற்பத்தாவது வருஷத்திற்குள் உண்டான தெள்ளாற்றுச் சண்டையை இது சூசிப்பிக்கலாம்.

இந்தப்போரில் அவனுக்கு எதிரியாக நின்றவன் யார்? அநேகமாய் எதிரியாக நின்றவன் பாண்டியனாகவே இருந்திருக்கவேண்டும். தெள்ளாறெறிந்தவனைத் தலைவனாகவுடைய நந்திக்கலம்பகம் 64-ஆவது

பாட்டில் அவன் வைகை (மதுரைக்கருகில் உள்ள நதி)க் கரையில் வெற்றிபெற்றானென்று கூறுகின்றது. (Ind. Ant. Vol. XXXVII Page 172).

தெள்ளாறு என்னும் பட்டணம் தெள்ளாறுக்கிராமமேயன்றி வேறன்று; அது ஒருகாலத்தில் தெள்ளாற்றுப்பற்றின் தலைநகராயிருந்தது. (Ins. No. 73 of 1908); இப்பொழுது அது வடஆற்காடு ஜில்லா வண்டிவாஷ் தாலூகாவின் பகுதியாயிருக்கின்றது; பல்லவர் காலத்தில் இந்தப்பட்டணம் இருந்ததென்று 'பல்லவர்பழமை' முதற் புத்தகம் 69-ஆவது பக்கத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உண்மையாக இந்த இடத்தில் பல்லவர் மாதிரியில்கட்டிய அநேக ஆலயங்களின் மீதங்களை நான் அங்கே கண்டேன்.

காஞ்சியிலிருந்து 30-மைலுக்குத் தெற்கேயுள்ள தெள்ளாறு வரைப் பாண்டியர்கள் சென்றார்கள் என்று சொல்லுவது யுக்திக்குப் பொருந்துமா?

நந்தியின் அரசாட்சிமுடிவில் பல்லவராஜ்யத்தின் தென்பகுதி பாண்டியர்களால் தாக்கப்பட்டதை நாம் ஒப்புக்கொண்டால் மேலே கூறியதும் பொருத்தமானதே. இந்தப்பிரவேசத்தின் முடிவில் வரகுணன் தொண்டைமண்டலத்தில் பெண்ணாற்றங்கரையிலுள்ள அரைசூரில்பாளயம் அடித்திருந்ததாக நமக்குத்தெரியும். (Ambasamudram Insc. No 105 of 1905)

நந்திஸிம்ஹாஸனம் ஏறியபிறகு, வரகுணன் பல்லவராஜ்யத்தின் மீதப்பாகத்தைப் பிடிக்க எண்ணி காஞ்சியைத்தாக்கினான் என்று நாம் எண்ணலாம். அங்ஙனம் தாக்கவந்தவனைத் தெள்ளாற்றில் நந்திதடுத்து, பல்முறை தோற்கடித்திருக்கலாம். அந்தத்தோல்வியில் முக்கியமானது, கும்பகோணத்தின் பக்கமுள்ள பழையாறை என்னும் பெயருடைய பழையாற்றில் உண்டானதாயிருக்கலாம். பிறகு வைகைக்கரைவரை நந்தி அவனைத்துரத்திச்சென்றுமிருக்கலாம்.

தெள்ளாறெறிந்த என்னும் அடைமொழியளித்த இந்தப்புகழ் பெற்ற போரினால், அவன் காஞ்சியில்மட்டுமென்றி (Insc. No. 12 of 1895) காவேரியின் கரைகளிலும் சமாதானமாக அரசாண்டிருந்தான்.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி இவைகளைச்சுற்றியுள்ள நாடுகளில் தெள்ளாறு வென்றவனது பலலிகிதங்கள் காணப்படுகின்றன. அவனது 10-ஆவது வருஷத்தில் தில்லைஸ்தானத்திலும் (No. 52 of 1895) 12-ஆவது வருஷத்தில் சேந்தலையிலும் (No. 11 of 1899) 18-ஆவது வருஷத்தில் கோவலடியிலும் (No. 283 of 1901) 22-ஆவது வருஷத்தில் திருப்பலாத்துறையிலும் (No. 180 of 1907) அந்த லிகிதங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

அவன் நாயர் பிரதேசத்தை ஆண்டானென்று வேலூர்ப்பாளயம் சாஸனங்கள் கூறுகின்றன. (நாயர்பிரதேசம் செங்கற்பட்டுஜில்லா சைதாப்பேட்டைத் தாலுகாவிலுள்ளது) வடக்கே குடிமல்லத்தையும் அவன் ஆண்டான். அவ்விடத்தில் பாணஅரசன் விக்ரமாதித்தன் அவனுக்குக்கீழ்ச் சிற்றரசனாயிருந்தான். (Insc. No. 229 of 1903, and No. 1a of 1880. S. I. I. Vol. III, No. 42. P. 93).

அவனது ஆளுகையில் புலவர்களும் ஏராளமாயிருந்தார்கள். நாம் முன்னே சொன்ன நந்திக்கலம்பகம் தவிர வேறு அனேக நூல்களும் உண்டாயின.

"இந்தப்பல்லவ அரசன் ஆளுகையிற்றான் பாரதவெண்பாப் பாடிய பெருந்தேவனார் வாழ்ந்திருக்கவேண்டும்; ஏனென்றால் உத்தியோகபர்வம் கடவுள்வாழ்த்தில் தன் காலத்தவனை தெள்ளாற்றில் பகைவரைவென்ற பல்லவனைப்பற்றிக்கூறுகின்றார்.

புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய நூல்களின் கடவுள்வாழ்த்து மேலேகூறிய பெருந்தேவனாராலேயே பாடப்பெற்றதென நம்பப்படுகிறது." (G. O. No. 922, 923. August 1899. P. 6.)

(4) நிருபதுங்கன். (சுமார் 854—880.)

பாகனூர்ச்சாஸனங்கள் இந்த அரசனுடைய பிறப்பை மிக நுட்பமாகக்கூறுகின்றன. மூன்றாவது நந்திவர்மன் ராஷ்டிரகூடவமிசத்தைச் சேர்ந்த சங்கா என்னுமொரு ராஜகுமாரியை மணஞ்செய்தான். அவள் மகன் நிருபதுங்கன். இந்தப்பெயர் 815-முதல் 879 - வரை அரச

செய்த முதல் அமோகவர்ஷன் என்னும் ராஷ்டிரகூட அரசனும் வசித்துள்ளானாகையால், சங்கராஜகுமாரி முதலாவது அமோகவர்ஷன் மகள் என்பதற்கு ஸந்தேகமில்லை. (E. p. Ind. Vol. IV. P. 181.)

நிருபதுங்கன் முடிசூட்டப்பெற்றபொழுது இளைஞனாக இருந்தானென்றும், அரிசித் நதிக்கரையில் பாண்டியர்களை அவன் வென்றதனால் அவனது அரசாட்சியின் ஆரம்பகாலம் புகழ்பெற்றதாயிருந்ததென்றும் பாஹூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன.

இந்தவிஷயத்தைப்பற்றி நாம் முன்னமேயே கூறியுள்ளோம். இந்த ஆறு, அரிசில் அரசிலாறே என்று மகா-ா-ா-ஸ்ரீ கோபிநாதராயரவர்கள் கூறுகின்றார்கள். (Vide. S. I. I. Vol. II. P. 52.) இந்த அரசிலாறு கும்பகோணம் வழியோடி காரைக்காற் பக்கத்தில் கடலோடுகலக்கும் அரசலாறேயாம்.

நிருபதுங்கன் சத்துரு, அரிசித் நதிக்கரையிலுள்ள குடமூக்கில் (கும்பகோணம்) பல்லவர்களைத்தாக்கிய மாறவர்மன் பரசக்ரகோலாஹலனே என்று நாம் கூறியுள்ளோம்.

நிருபதுங்கன் ஸ்ரீராமனைப்போல் புகழ்படைத்தான் என்று பாஹூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன. அதை நினைக்கும்போது நமக்கு இலங்கையின் ஞாபகம் வருகின்றது. இரண்டாவதுசேனனும் மாயாபாண்டியனும் நிருபதுங்கனோடு சேர்ந்திருந்தார்கள் என்றும் இந்தச் சண்டையின்முடிவில் அதாவது சுமார் 861-இல் மதுரை பிடிபட்டதென்று நாம் முன்னரே கூறியுள்ளோம்.

பாஹூர்ச்சாஸனங்கள் அவனது அரசாட்சியின் 8-ஆவதுவருஷத்தில் உள்ளவை. ஆகையால் நமது காலநிர்ணயம் சரியாயிருந்தால் அந்தக்காலம் மதுரை பிடிபட்டதற்குச் சற்றுப்பிறகு 862-ஆக இருக்கலாம்.

நிருபதுங்கன், ஸமாதானத்தோடு அரசாண்ட ஒரு புகழ்பெற்ற அரசன். ஏனென்றால், அவன் காலத்தனவாக பல்லவராஜ்யம் முழுவதும் விரவிக்கிடக்கும் அனேக சாஸனங்கள் அகப்பட்டிருக்கின்றன.

அவையாவன: வடக்கே திருவாலங்காடு (Nos. 460 & 461 of 1905) திருவொற்றியூர்களிலிருந்து (No. 162 of 1912) தெற்கே கண்டியூர் (No. 17 of 1895) கோவிலடி (Nos. 303, 301, & 300 of 1901) லால்குடி (No. 84 of 1892) வரையிலும். அன்றியும் குடிமல்லம் சாஸனங்களும் (No. 228 of 1903) நார்த்தாமலைச்சாஸனங்களும் (No. 365 of 1904), வடக்கே பாணஅரசன் வித்யாதரனும், தெற்கே முத்தரையனும் (சாத்தம்—பளியில்) அவனுக்குக்கீழ், சிற்றரசர்களாயிருந்தார்கள் என்று கூறுகின்றன. ஆகையால் நிருபதுங்கனதுராஜ்யம் வடக்கே சுவர்ணமுகியாறுமுதல் தெற்கே தென்வெள்ளாறுவரை அதாவது காளஹஸ்திமுதல் புதுக்கோட்டைவரை பரவியிருந்தது.

அன்றியும் இந்தச்சாஸனங்கள் எல்லாம் அவனது அரசாட்சியின் ஆரம்பத்திலும் முடிவிலும் தோன்றியனவாகக் காணப்படுவதனால் அவனது அரசாட்சி 26-வருஷமும் அவன் புகழ் குன்றவேயில்லையென்று முடிபு கூறலாம்.

(5) அபராஜிதன். அபராஜிதனைப்பற்றிக்கூறும் 12-சாஸனங்கள் கிடைத்திருக்கின்றன. 1912-இல் 159, 190-நம்பர் லிகிதங்களில் அவனுக்குப் போத்தரையர் என்னும் பட்டம் இருப்பதனால் அவன் ஒரு பல்லவ அரசன். இந்த லிகிதங்கள் எல்லாம் அவனது அரசாட்சியின் மூன்றாவது வருஷத்துக்கும் 19-ஆவது வருஷத்துக்கும் இடையில் தோன்றியவை.

அவையாவன:—

| | | | | |
|---|---|---|---|---|
| 3-ஆவது | வருஷம் | No 351 of 1908. | மாங்காடு |
| 4 | ,, | ,, | No 158 of 1912. | திருவொற்றியூர் |
| 4 | ,, | ,, | No 161 of 1912. | ஷை |
| 4 | ,, | ,, | No 31 of 1912. | சத்யவேடு |
| 5 | ,, | ,, | No 32 of 1912. | ஷை |
| 6 | ,, | ,, | No 190 of 1912. | திருவொற்றியூர் |
| 7 | ,, | ,, | No 163 of 1912. | ஷை |
| 8 | ,, | ,, | No 159 of 1912. | ஷை |
| 12 | ,, | ,, | No 180 of 1912. | ஷை |

18 ,, ,, No 435 of 1905. திருத்தணி
18 ,, ,, No 433 of 1905. ஷை

திரிபுவனவீரதேவன்காலத்ததாய ஒருலிகிதமும் உத்தரமல்லூரிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது அது அபராஜிதனுடைய அரசாட்சியின் 19-ஆவது வருஷத்தைப்பற்றிக் கூறுகின்றது.

மாமண்டூர்ப்பக்கத்திலுள்ள உக்கல்கிராமமும் அபராஜித சதுர்வேதிமங்கலம் என்னும் பெயருடைத்தாயிருந்தது. (S. I. I. Vol. III P. 2).

அபராஜிதன் ஆளுகையில் நிகழ்ந்த இரண்டு ஸம்பவங்களைப் பற்றி நமக்குத்திட்டமாய்த்தெரியும்.

(1) ஸ்ரீபுறம்பிய (திருப்புறம்பியம்) யுத்தம்.

வரகுணபாண்டியன் ஸ்ரீபுறம்பியத்தில் அபராஜிதனோடும்அவன் நண்பனான மேலைக்கங்க முதலாவதுபிரிதிவிபதியோடும் போர்புரிந்தானென்று உதயேந்திரம் சாஸனங்கள் கூறுகின்றன. (G. O. No 492, 2nd July 1906—Part II No 9. P. 64).

இறுதிப்பெயர்க்காரன்யுத்தத்தில் கொல்லப்பட்டான். முதலாவது பிரிதிவீபதியின் கடைசிலிகிதம் 879-இல் உள்ளதாகையால் ஸ்ரீபுறம்பியயுத்தம் 879-க்குப்பின் உண்டானதாகவே ஒப்புக்கொள்ள வேண்டும்.

862—863-இல் ஸிம்ஹாசனமேறின பாண்டியனே வரகுணன் என்று சொல்லப்படுகிறது. (Insc. No 705 of 1905).

சோழர்கள் வரகுணனுக்கு நண்பர்களாக இருந்திருக்கலாம்; ஏனென்றால் 1912-இல் 337-ஆவது நம்பர் லிகிதம், பாண்டியரும் சோழரும் மேலைக்கங்க பிருதிவய்யனுக்குச் சத்துருக்களாயிருந்தனரென்று கூறுகின்றது.

(2) பல்லவர்நிலை குலைந்ததும் ஆதித்யன்வென்றதும்.

முதல் ஆதித்யன் என்ற சோழவரசன் பல்லவஅரசன் அபராஜிதனைப்போரிற்புறங்கண்டு அவன் ராஜ்யத்தையும் பிடித்தானென்று

திருவாலங்காட்டுச்சாஸனங்கள் கூறுகின்றன. பாட்டு 49. (G. O. No 492 2nd July 1906 P. 65). 1911-இல் 286—287-ஆவது நம்பர் லிகிதங்களால் இந்தச்சண்டையில் ஆதித்தனுக்கு ஸ்தாணுரவி என்ற ஒருசேரஅரசன் துணைவனுயிருந்தானென்று தெரிகிறது. (G. O. 919 29th July 1912. Part II No 11 P. 61)

தொண்டைமண்டலம் ஆதித்யன் அரசாட்சியின் 21-ஆவது வருஷத்துக்குமுன் அதாவது 900-க்குமுன் வெல்லப்பட்டதென்று மேலே கூறியுள்ளோம். (G. O. No 503 27th July 1907. Part II No 29. P. 71).

ஆகையால் அபராஜிதன் 9-ஆவது நூற்றுண்டின் இறுதியில் வாழ்ந்தவன் என்பதும் பல்லவவமிசத்தில் அவனே கடைசிஅரசன் என்பதும் நிச்சயம்.

ஆனல் பல்லவவமிசாவளியில் அபராஜிதன் எந்தஸ்தானத்தை வகிக்கிறுன்என்பதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

இந்த விஷயத்தைப்பற்றி இரண்டு அபிப்பிராயங்கள் உள்ளன. (1) அபராஜிதன் நிருபதுங்கன்மகன் என்று வெங்கய்யா அவர்கள் சொல்லுகிறுர்கள். (G. O. No. 492, 2nd July 1906. Part II No 9. Page 64).

அப்படியானல் நிருபதுங்கன் ஸ்ரீபுறம்பியத்தில் கொல்லப்பட்டான் என்றும், யுத்தத்தில் கைகலந்திருந்த அவன்மகன் ஸிம்ஹாஸனமேறி அபராஜிதன் (ஜெயிக்கப்படாதவன்) என்ற பட்டமும் பெற்றுன் என்றும் நாம் கொள்ளவேண்டும்.

ஸ்ரீ புறம்பியயுத்தத்தில் சோழராஜகுமாரன் சோழராஜனுக முடிசூட்டப்பெற்று முதல்ஆதித்யன் எனப்பெயரும் பெற்றுன். ஆகையால் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள் அவன்வசமே இருந்திருக்கவேண்டும்.

ஆனல் தொண்டைமண்டலமோ கி. பி. 880-முதல் 900-வரை 20-வருஷம் அங்கேயே அரசாண்ட அபராஜிதன்வசம் இருந்துவக்

தது. அவனுடையவும் ஆதித்யனுடையவும் அரசாட்சியின் இருப தாவது வருஷத்திலே ஆதித்யன் சோழர்களின் உதவியோடு அதைக் கைப்பற்றினன்.

இதற்கு அநுகூலமாக அபராஜிதனுடையலிகிதங்கள் மாங்காடு, திருவொற்றியூர், சத்யவேடு, திருத்தணி, உத்தரமல்லூர் முதலிய தமிழ்நாட்டின் வடபாகத்திலுள்ள பட்டணங்களிலேயே காணப்படு கின்றன. தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் ஒன்றுமே காணப்படவில்லை.

மேலும் முதல்ஆதித்யன் காவேரிநதிக்கரைகளை கி.பி. 882—885, 886, 887-முதலிய வருஷங்களில் கைக்கொண்டிருந்தானென்று 1911-இல் 222-ஆவது நம்பர் லிகிதத்தாலும் (இரண்டாவது வரு ஷத்தில் திருநாகேசுவரம்) 1914-இல் 101, 104, 105, 127, 130, 133-ஆவது நம்பர் லிகிதங்களாலும் (5-ஆவது, 6-ஆவது, 7-ஆவது வருஷங்களில் திருவெறும்பூர்) நாம் அறிகின்றோம். அன்றியும் "அநேக கங்க—பல்லவ சிலாலிகிதங்கள்உள்ள திருவொற்றியூரில் ராஜகேசரிவர்மன் (ஆதித்யன் I) ஆளுகையில் உள்ள ஒரு பிரமாண மாவது காணப்படாமலிருப்பதற்குக் காரணம் விளங்கவில்லை. ஒருக் கால் திருவொற்றியூர் இடம் பெற்றிருக்கும் தொண்டைமண்டலத் தின் வடபாகம் அவன் ஆளுகையில் முழுதும்வராமல் இருந்திருக்க லாம்." (G. O. No 961. 2nd August 1913. Part II No 18. P. 94).

திருவொற்றியூர் ஆலயத்தில் அபராஜிதன் அரசாட்சியின் 4-ஆவது, 6-ஆவது, 7-ஆவது, 8-ஆவது, 12-ஆவது வருஷங்களில் உள்ள 6-லிகிதங்கள் இருக்கின்றன; ஆனால் ஆதித்யனுடையதாக ஒன்றேனும் இல்லை.

(2) அபராஜிதன் என்னும் பெயர் நிருபதுங்கனது மறை பெயரே என்று கோபிநாதராயரவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். (The Pallavas and Ganga Pallavas—Madras Christian College Magazine-April 1907).

அபராஜிதன் நிருபதுங்கனுக்கே இருந்தால் ஸ்ரீ புறம்பியத்தில் ஒரேஒரு யுத்தமே உண்டாயிருக்கவேண்டுமென்று இதற்கனுகூல மாகக்கூறலாம்.

இதற்குமாறாக அபராஜிதன் நிருபதுங்கன்மகனென்று கொள்ளப்பட்டால் இரண்டு சண்டைகள் உண்டாயிருக்கவேண்டும்.

(1) 880-க்கு அணித்தாக அபராஜிதன் வரகுணபாண்டியனை வென்ற ஸ்ரீ புறம்பிய யுத்தம்.

(2) 899-க்கு அணித்தாக ஆதித்யன் தொண்டைமண்டலத்தை வென்றயுத்தம்.

இதில் அபராஜிதனே தோல்வியடைந்திருக்கவேண்டும்.

இதில் எது சரியானதென்று இனிமேல் அறியப்படும் புதுவிஷயங்களால் உறுதிப்படவேண்டியதாயிருக்கிறது.

---

## முடிவுரை.

---

முன்பக்கங்களில் பல்லவசரித்திரத்தைப்பற்றியுள்ள நமது அறிவைவிசாலப்படுத்த முயன்றோம்.

அறியப்படாத விஷயங்கள் இன்னும் பலவுள; உறுதியடைய வேண்டிய பாகங்களும் சிலவுள; ஆனாலும் முக்கியமான விஷயங்களையெல்லாம் அறிந்துகொண்டோமென்பது எனது நம்பிக்கை.

### (1) ஸிம்ஹவிஷ்ணுவுக்கு முன் பல்லவர்கள்.

அநேக தாம்பிரசாஸனங்களால் (மயிதவோலு, செந்தலூர், ஓம்கோடு, உதயேந்திரம், கூரம் முதலியன) பல்லவவமிசம் மிகப்பழமையானதென்று விளக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பரஸ்பரம் இணைக்கமுடியாத அநேகவமிசங்களைப்பற்றியும் இவை கூறுகின்றன. இந்த அரசர்களுக்கும் ஸிம்ஹவிஷ்ணு

வமிசத்துக்குமுள்ள சம்பந்தம்முற்றும் கவனிக்காமலே விடப்பட்டிருக்கிறது. இந்த இரகசியங்களிற் பல வாயலூர்லிகிதங்களால் விளக்கமுற்றிருக்கின்றன.

ராஜாவானமுதற்பல்லவன் கி. பி. இரண்டாவது நூற்றாண்டின் முடிவில் ஒரு ஆந்திர அரசன்மகளை மணந்து அந்த உயர்பதவியைப் பெற்றான் என்று நாம் நினைந்துள்ளோம்.

ஸ்கந்தவர்மன், குமாரவிஷ்ணு, புத்தவர்மன், (செந்தலூர்ச்சாஸனங்களில் இந்தப்பெயர்கள் உள்ளன) முதலிய அரசர்கள் சமுத்ரகுப்தனுக்கு எதிரியான விஷ்ணுகோபனுக்குமுன், கி. பி. 339-க்கு அணித்தாக ஆண்டிருக்கவேண்டுமென்று வாயலூர் லிகிதத்தினால் விளக்கப்படுவதாகத்தோன்றுகிறது.

உதயேந்திரம் சாஸனங்களிலிருந்து, ஸ்கந்தன்—ஸிம்ஹன்—ஸ்கந்தன்—நந்தி என்ற வமிசாவளியைப் பெறுகின்றோம்; ஆனால் இந்தச்சாஸனங்கள் ஸந்தேகமுடையனவாகத் தோன்றின. அது ஒரு உண்மையான பிரமாணத்தின் பகர்ப்போ அல்லது பொய்ப்பிரமாணமோ என்று நமக்கு விளங்காதிருந்தது.

முற்றிலும் சமானமான வமிசாவளியைத்தந்திருக்கிற வாயலூர் லிகிதத்தினால் உதயேந்திரம் வமிசாவளி மெய்யானதென்று விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் உருவுபள்ளி வமிசாவளியோடொத்திருக்கும் வீர—ஸ்கந்த—ஸிம்ஹ என்ற வரிசை வாயலூர்ச்சாஸனத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால், உருவுபள்ளிச்சாஸனகாலத்தில் அரசாண்ட ஸிம்ஹவர்மன் உதயேந்திரம் சாஸனங்களில் கூறப்படும் நந்தியின் பாட்டனேயென்று நிரூபிக்கப்பட்டது.

கடைசியாக, ஸிம்ஹவிஷ்ணு—விஷ்ணுகோபன்-ஸிம்ஹவர்மன் ஸிம்ஹவிஷ்ணு என்னும் பெயர்த்தொகுதிகளையுடைய வாயலூர்லிகிதமே ஸிம்ஹவிஷ்ணுவின் அடுத்த முன்னோர்களைப்பற்றிச் சரியாகக் கூறும் பிரமாணம்.

வாயலூர்லிகிதம் விளக்கப்பட்டது ஸிம்ஹவிஷ்ணுவின் முன்னோர் சரித்திரத்தை அறிவதற்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது.

## (2) ஸிம்ஹவிஷ்ணுவின் வமிசம்.

திருவிதாங்கூர் ஸமஸ்தானத்தில் மத்தவிலாஸப்ரஹஸனம் கண்டெடுக்கப்பட்டதும் இந்நூலைப்பற்றி மாமண்டூர்லிகிதத்தில் குறிக்கப்பட்டிருப்பதும் அதைச்சார்ந்த சரித்திரத்தை விளக்குவதற்கு மிக உதவியாக இருக்கிறது.

ஸிம்ஹவிஷ்ணுவின் மகனான முதல் மஹேந்திரவர்மனே மாமண்டூர், வல்லம், தலைவனூர், சியமங்கலம், மஹேந்திரவாதி, பல்லாவரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலுள்ள குகைகளை வெட்டினான் என்பதற்கு இப்பொழுது ஸந்தேகமில்லை.

ஞானியான முதல்மஹேந்திரவர்மனைப்பற்றித் திட்டமான சில விஷயங்கள் நமக்குத்தெரியும். அவன் ஒருகவியாகவும், ஸங்கீத வித்வானாகவும், சிற்பசாஸ்திரியாகவும், ராஜ்யாதிகாரியாகவும் இருந்தான். கிருஷ்ணாநதிக்கரையில் வழங்கியிருந்த கலாசாஸ்திரங்களைத் தென்னாட்டில் நடப்பாக்கி, தமிழ்நாட்டில் சமயமும், இலக்கியமும் விளக்கமுறும்படி செய்தான்.

## (3) நந்திவர்மன் வமிசம்.

8-ம் 9-ம் நூற்றாண்டுகளுக்குப் பல்லவர்சரித்திரமே இருக்கவில்லை. பாஹூர்ச்சாஸனங்களில் காணப்பட்ட கொங்கணிகன் என்ற ஒரு பெயரே சரித்திரகாரர்களைக் குழப்பத்துக்குள்ளாக்கிவிட்டது. அந்த விஷயத்தைத்தெளிவாயுணர்ந்தவர் கோபிநாதராயர் ஒருவரே. கங்க—பல்லவவாதம் தப்பானதென்று அவர் உறுதியாகக் கூறிவிட்டார்.

நிருபதுங்கனது முன்னோர்கள் பெயருடன்காணப்பட்ட கொங்கணிகன் என்னும் பெயரினால், அவன் நந்திவர்மன் பல்லவமல்லனது வமிசத்தான் அல்லனென்றும், கங்கஅரச வமிசத்தைச்சேர்ந்தவனென்றும் ருசுவாகிவிட்டதாக, அவ்வாதத்தை ஸ்தாபித்தோர் பின்னும் வாதிக்க இடமிருந்தது.

வாயலூர்லிகிதத்தினால் இந்தவிஷயம் பூரணமாக விளக்கமடைந்துவிட்டது.

ஸிம்ஹவிஷ்ணுவமிசத்து ஒரு அரசன் ஆளுகையில் உள்ளதும் ஏழாம்நூற்றுண்டினதுமான இந்தலிகிதம், பல்லவர்களின் முன்னோர் கூட்டத்தில் விமலனையும் கொங்கணிகனையும்பற்றிக் கூறுகின்றது.

ஆகவே, வாயலூர்லிகிதத்தால் எல்லாஸந்தேகங்களும் நீங்கிவிட்டன; கடைசியான பல்லவர்களின் வமிசாவளிப்பட்டிகையும் ஸந்தேகமற உறுதிபெற்றுவிட்டது.

முற்றும்.

பண்டிதர். S. முத்துசுவாமிப்பிள்ளை
ஸென்று ஜோஸப் ஹைஸ்கூல்,
திருவனந்தபுரம்.

---

உ

கடவுள் துணை.

# துவணா விஞ்ஞாபனம்.

செந்தமிழ்ச் சீரியர்களுடைய திப்பிய சமுகங்களுக்கு:—

செந்தமிழ்ப் பதினொருந்தொகுதியின் பத்தாவது பகுதியிலே (ருoஎ, ருoஅ) திருவனந்தபுரம் ஹைக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் K. G. சங்கரையர் (B.A., B.L.) அவர்கள் எழுதியிருந்த செந்தமிழபிமானிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம் என்ற தலைப்பின்கீழ்க் கண்டவிஷயம் நம்மனோரனைவர்க்கும் மிக்க மகிழ்ச்சியைத் தந்திருக்குமென்பதொருதலை.

அதே விஷயமாக நமது தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகக்கூட்டத்திலே தீர்மானஞ்செய்யப்பெறுதல் நல்லதாமென்பதைக் கருதி நான்கு மாதங்களுக்குமுன் மூன்று தீர்மானங்களைச் 'செந்தமிழ்ப்' பத்திரிகையிலே வெளிவருமாறு அனுப்பிவைத்தேன். அவை, 'அடியேன் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினன் அல்லன்' என்ற காரணத்தாலோ (அங்கத்தினனல்லாததற்கும் இதற்குந்தொடர்பின்று.) அன்றி வேறு எக்கார

ணத்தாலோ பிரசுரிக்கப்பெறவில்லை. எனினும், ஸ்ரீமாந்-நியாவாதி ஐயரவர்களது விஞ்ஞாபனத்தால் அடியேனது விருப்பம் ஒருவகையிற் பூர்த்தியாயது.

ஆதலின், அடியேன் ஸ்ரீமான் ஐயரவர்களது விஞ்ஞாபனத்தை முழுமனத்துடன் ஆதரிப்பதோடு வஞ்சிமாநகராராய்ச்சி என்ற தலைப் பெயருடன் கூடிய பத்திராதிபரவர்களது அரியபெரிய ஆராய்ச்சியுரை யைப் பூர்த்திசெய்தருளுமாறு வேண்டுகிறேன். காலங்கடந்தமையின் அத்தீர்மானங்களை ஈண்டு யான் காட்டவில்லை.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.

---

## அரசவாழ்த்து.

---

தாரணிக்குத் தன்னரசோ டாட்சிசமா தானமிவை
சாரமென்றோர்ந் தானவற்றைத் தாஞட்டத்—தீரமுடன்
சண்டையிற்சேர்ந் தான்வென்றான் ஜார்ஜரசன் நீடூழி
மண்டலத்தே வாழ்க மகிழ்ந்து.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.

---

## 1918-ஆு டிசம்பர்மீ 15உ காலை 9-மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக சபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

—————:0:—————

1. மகா-அ-அ-ஸ்ரீ. Hon'ble K. இராமையங்காரவர்கள், B.A. B.L., —அக்கிராசனம் வகித்தவர்,
2. „ V. S. இராமசாமிசாஸ்திரியவர்கள் B.A. B.L.,
3. „ M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
4. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A. B.L.,
5. „ T. சுதர்சனுச்சாரியர் அவர்கள்.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

I. 1918-ம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களின் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. சங்கம்வைத்துள்ள பாலவனத்தம் எஸ்டேட் கட்டடத்திற்கு மீ 1-க்கு ரூ. 100-வாடகை அளித்துவர வேண்டுமென்று கொடுத்துள்ள பாலையம்பட்டி ஜமீந்தாரவர்களின் நோட்டீஸைக் கவனித்து வேண்டியவை வற்றைச் செய்வதற்கு, கனம் அக்கிராசனாதிபதி யவர்களும் இல்லாததால் தள்ளிவைக்கலாயிற்று.

III. 1918-19-ம் வருஷத்திற்குத் தயாரித்த பட்ஜெட், கனம் அக்கிராசனாதிபதியவர்களும் இருந்து கவனிப்பதற்காகத் தள்ளிவைக்கலாயிற்று.

IV. சங்கத்தின் அங்கத்தினராகிய மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் S. Rm. M. ராமசாமி செட்டியாரவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ V. J. தம்பிப்பிள்ளையவர்கள் காலஞ்சென்றமைக்கு, சங்கத்தார்க்குண்டாகிய அநுதாபத்தை மகா-ள-ஸ்ரீ Hon'ble அண்ணாமலை செட்டியாரவர்களுக்கும், Mr. V. J. தம்பிப்பிள்ளையவர்கள்மனைவியார்க்கும் முறையே தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

V. 1919-ம்வருஷத்தில் சங்கத்தாரால் நடத்தப்பெறும் மெற்றிக்குலேஷன் தமிழ்ப்பரீக்ஷைக்கு, சென்னை S. S. L. C. பரீக்ஷைக்கு வைக்கப்பட்டிருக்கும் C. Group-ல் கண்ட தமிழ்ப்பாடங்களையே பாடங்களாக அநுசரிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

VI. யாழ்ப்பாணம் இராமநாதன் காலேஜ் பெண்களுக்கு சங்கத்தாரால் நடத்தப்படும் பரீக்ஷை சம்பந்தமாக மேற்படி கலாசாலைத்தலைவர் மகா-ள-ள-ஸ்ரீ Hon'ble P. இராமநாதன் அவர்களின் விவரமான கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

VII. சிவகாசி, பரீக்ஷாஸ்தலங்களில் ஒன்றாக ஏற்படுத்தப்பட்டதை அங்கீகரிக்கலாயிற்று.

VIII. கலாசாலை மாணவர்களின் போஷணைக்காக மாதந்தோறும் ரூ. 10 அளித்துவருவதாக, திருப்பத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ ராம. நா. நாகப்பபிள்ளை அவர்கள் அன்புடன் ஒப்புக்கொண்டிருப்பதற்கு சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தனமளிக்கலாயிற்று.

IX. சங்கத்தின் அங்கத்தினருள் பெரும்பாலார் சந்தாத்தொகை சரிவரச் செலுத்தாதிருப்பதினால், அன்னோர்களை அங்கத்தினர் ஸ்தானத்தினின்றும் விலக்கிவிட வேண்டுமென்பதாக மகா-ள-ள-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் தெரிவித்துக்கொண்டதில், அன்னோர்கட்கு சந்தாபாக்கி விவரங்கண்டு கடிதம் எழுதிக்கேட்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

K. RAMAAIYANGAR,

அக்கிராசனம் வகித்தவர்.

---

(True copy.)

*Joint Secretary.*